வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
MARUTHI MONEY EXCHANGE
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 18.08.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 251 | பக்கங்கள் : 16

# பாதுகாப்பற்ற நீர்நிலையில் வீழ்ந்த மாணவர்கள் இருவர் உயிரிழப்பு

## வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று சோகம்
## துணைவேந்தர் தாக்கப்பட்டதால் பதற்ற நிலை

வவுனியா, ஒக. 18

வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் உள்ள பாது காப்பற்ற நீர் நிலையில் வீழ்ந்து பாடசாலை மாண வர்கள் இருவர் உயிரிழந் தனர். சம்பவம் அறிந்து அங்கு சென்ற வவுனியா பல்கலைக்கழக துணை வேந்தர் அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியால யத்தை சேர்ந்த 14, 15 வயது மாணவர்களே உயிரிழந்தனர்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வவுனியா வலய மட்ட விளையாட்டு போட்டிகள் கடந்த இரு தினங்களாக பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழக

11

# சிவனுக்கு கோயில் குருந்தூர்மலையில்

## இந்து - பௌத்த அமைப்புகள் இணைந்து அமைக்க முடிவு



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 18

**முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் சிவன் ஆலயத்தை இந்துக்களுடன் இணைந்து பௌத்தர்களும் அமைக்க வுள்ளோம் என்று ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் இந்தத் தகவலை நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நாக விகாரையில் வைத்துத் தெரி வித்தார். இதன்போது அவருடன் யாழ். நாகவிகாரை, தையிட்டி, நாவற்குழி விகாரைகளின் விகாராதிபதிகளும் இருந்தனர். இந்து அமைப்புகளின் பிரதி நிதிகளும் உடனிருந்தனர்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாக விகாரையில் நேற்றைய தினம் பௌத்த விகாரை களின் விகாராதிபதி

15

# குருந்தூர்மலையில் இன்று பொங்கல்!

முல்லைத்தீவு, ஒக. 18

குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கலுக்கு தடை விதிக்க வேண்டும் என்று பொலிஸார் முன்வைத்த விண்ணப்பத்தின்மீது தடை விதிக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் மறுத்துவிட்டது. இது தொடர்பாக நேற்று நடந்த வழக்கில், பொங்கல் வழிபாட்டை தடுக்க எவருக்கும் எந்தவிதமான அதிகாரமும் இல்லை - என்று குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்கல் இடம்பெற்றால் இரு குழுவினரிடையே ஏற்படக் கூடிய கருத்து முரண்பாடு உணர்ச்சிகரமான விடயங்கள் என்பதால் அது மதக் கலவரமாக உருவாகி உயிர் ஆபத்து

15

## பொங்கலுக்கு எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஒக. 18

குருந்தூர்மலை பொங்கலுக்கு எதிராக பௌத்தர்களை திரளு மாறு முல்லைத்தீவில் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருந்தன.

குருந்தூர்மலை ஆதி சிவன் ஆலயத்தில் இன்று பொங்கல் நடைபெற வுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே பௌத்தர் களை திரளுமாறு சுவரொட்டிகள் மூலம் அழைப்பு

15

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி

# அகழ்வுக்கான நிதி கிடைக்கவில்லை நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிப்பு

முல்லைத்தீவு, ஒக. 18

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிக்கான நிதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, புதைகுழி அகழ்வுக்கான நிதியை வழங்குவதாக

15

## ஒரு மாதத்துக்கான நெல்லே இருப்பில்!

கொழும்பு, ஒக. 18

ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதிக் கான நெல் கையிருப்பு மாத்திரமே தம்வசம் உள்ளதாக நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித் துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற் போது 45 இலட் சம் கிலோ நெல்

15

# வறட்சியால் வடக்கில் மட்டும் 75 ஆயிரம் மக்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக 18

வறட்சி காலநிலை யால் வடக்கு மாகாணத் தில் 75 ஆயிரத்து 287 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 70 ஆயி ரத்து 238 பேரும் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள் ளது.

இதேவேளை, நாடு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட் சத்து 90 ஆயிரத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசேடமாக, 15 மாவட்டங்களில் உள்ள 52 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் வறட்சியான

15

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஒக. 18

வவுனியா - ஈரற்பெரியகுளத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியாவில் இருந்து ஈரற்பெரியகுளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தார். டிப்பர் வாகன சாரதி சிறு காயங்களுக்கு உள்ளானர். (ஐ)

# திருமலையில் கோவிலை இடித்து விகாரை அமைக்கப்படுகின்றது

திருகோணமலை, ஒக. 18

திருகோணமலை மாவட் டத்தின் வெருகல் பிரதே சத்தில் மலைநீலி அம்மன் ஆலயத்தை இடித்தழித்து பௌத்த விகாரை அமைக் கப்பட்டு வருகிறது என்றுஅந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள் ளனர். வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லடியில் உள்ள மலைநீலி அம்மன் ஆலயத்தின் காணிகள் தொல்லியலுக்குரிய பகுதி யாக அடையாளப்படுத் தப்பட்டு கையகப்படுத் தப்பட்டிருந்த நிலையில்

அது பௌத்தத்துக்கு உரியதாக உரிமை கோரி அப்பகுதியில் விகாரை அமைக்கப்படுகிறது.

இதேவேளை, யுத்தத் தால் இடம்பெயர்ந்த மக்கள் 2007ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்தபோது அந்த ஆலயம் இராணுவத் தால் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயத்தின் இடிபாடு களை அகற்றி அம்மனின் விக்கிரகம் வீதியில் வீசப் பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## ஹெரோயினுடன் கான்ஸ்டபிள் கைது

மன்னார், ஒக. 18

பொலிஸ் கான்ஸ்ட பிள் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருவ தாவது,

குறித்த நபர் புதன்கி ழமை மாலை மன்னார் பெரிய கடை பகுதியில்

15

## இப்படியும் நடக்கிறது

குருந்தூர்மலையில் இன்று வெள்ளிக்கிழமை பொங்கலுக்கு தமிழர்கள் சிலர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றது.

ஏற்கனவே, நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் பொங்கல் நடத்த சென்றவர்கள் மீது பொலிஸாரும் சில பௌத்த மதவாதிகளும் தாக்குதல் நடத்தியதுடன், பொங்கல் நடத்த முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து மீண்டும் நீதிமன்றை நாடி பொங்கலுக்கான அனுமதியை பெற்றுக்கொண்டு பொங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் மறுபுறம், பொங்கல் வழிபாட்டை தடுப்பதற்காக சிங்கள - பௌத்த கடும்கோட்பாளர்கள் பெரும் ஏற்பாடுகளைச் செய்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பொங்கல் நடத்தவிடாமல் தடுப்பதற்காக குருந்தூர் மலைக்கு பெரிய படையெடுப்பை செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

நிலைமைகளை பார்க்கும்போது, பெரும் முறுகல் நிலை ஒன்று அங்கு ஏற்படுவதற்கு ஏதுநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இவ்வாறு அங்கு 'போர் மேகங்கள்' சூழ்ந்துள்ள அதேவேளையில்தான், யாழ்ப்பாணத்தில் நேற்று ஒரு சமாதான முயற்சிக்கும் பச்சைக்கொடி காட்டப்பட்டிருக்கின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் குருந்தூர்மலைக்கு சென்றிருந்த இலங்கை சிவசேனை தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தம் ஐயா, அங்கு புத்தர் சிலை ஒன்றின் முன்னால் நின்று வழிபடுகின்ற படங்களை வெளியிட்ட சிலர் அவருக்கு எதிராக மிக மோசமான பரப்புரைகளை செய்துவந்ததைக் காணமுடிந்தது.

ஆனால், அங்கு சென்ற அவர் குருந்தூர்மலை விகாராதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அப்போது அவரே (விகாராதிபதியே) சிவன் ஆலயம் கட்டப்படவேண்டியதன் அவசியத்தை மறவன்புலவு சச்சிதானந்தத்திடம் வலியுறுத்தியதுடன், கோவிலை மலை உச்சியில் கட்டுவதெனில் சிறிதாகவே கட்டவேண்டியிருக்கும் என்றும் ஆனால், மலையின் கீழே கட்டுவதெனில் பெரிதாக கட்டலாம் எனவும் அதற்கான காணியை தெரிவு செய்யவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தாரெனப் பின்னர் சச்சிதானந்தம், இந்த ஊர்க்குருவியிடம் தெரிவித்திருந்தார்.

சிவன் கோவில் கட்டப்படவேண்டும் என்பதிலும் அது சுமுகமாக நடக்கவேண்டும் என்பதிலும் விருப்பம் கொண்டிருந்த சச்சிதானந்தம், "மகா சங்கத்தினருடன் பேசி நீங்களே அதுகுறித்து முடிவுக்கு வாருங்கள்", என்றும் சொல்லிவிட்டு வந்திருந்தார்.

பின்னர், குருந்தூர்மலை விகாராதிபதியே யாழ்ப்பாணம் வந்து யாழ். நாக விகாரை விகாராதிபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி ஆகியோருடன் சிவசேனை தலைவரையும் மற்றும் சில அமைப்புகளையும் இணைத்து கலந்துரையாடிய பின்னர் ஊடகர் மாநாட்டை நடத்தினார்கள்.

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் சிவன் ஆலயத்தை நிறுவ அந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பௌத்த - இந்து அமைப்புகள் கூட்டாக இங்கு அறிவித்தன.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில், நேற்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில், தென்னிலங்கை பௌத்த பிக்குகள், சிவசேனை உள்ளிட்ட சில சைவ அமைப்புகளின் பிரதிநிதிகள், குருமார்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

இன்று குருந்தூர்மலையில், தமிழர்கள் பொங்கலில் ஈடுபடவுள்ள நிலையில், அது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை என்றும் அங்கு சிவன் ஆலயத்தை நிறுவுவது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது நம்மில் சிலர் அது எங்களுடைய கோவில் அதைக் கட்டுவதற்கு அவர்கள் என்ன அனுமதி தருவது என்று கிளம்பக்கூடும். ஆனால், அது இன்று நீதிமன்றில் இருக்கின்ற பிரச்னை. அதனை தொடர்ந்து பிரச்னையாகவே வைத்திருக்காமல், சுமுகமாக தீர்க்க சந்தர்ப்பம் கிடைக்கின்றபோது அதனை பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லையே.

**- ஊர்க்குருவி.**

# தமிழ் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் திணைக்களங்கள்

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம், ஓக. 18*

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளையும், பரிந்துரைகளையும் வரவேற்றுள்ள ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முன்னெடுப்புகள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்னைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தல் தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக நேற்று முன் தினம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயல்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் இருப்பதாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், தொல்லியல் ஆய்வு செயல்பாடுகள் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த வரலாற்றுத்துறை நிபுணர்களின் பங்குபற்றுதல் மற்றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புக்களாக அமைவதை அனுமதிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறாளாய் முருகன் ஆலயம், கீரிமலை தீர்த்தக் குளம் மற்றும் பருத்தித்துறை இறங்குதுறை போன்ற பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தி அண்மையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், துறைசார் நிபுணர்கள், சம்மந்தப்பட்ட பிரதேசத்தினை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் போன்ற யாருடைய கருத்துகளும் உள்வாங்கப்படாமல் கொழும்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானில் உள்ளடக்கப்பட்டுள்ள பறாளாய் முருகன் ஆலயம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தவறானவை என்பதை வரலாற்றுத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் சிலவும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மாறாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், முன்னெடுக்கப்படுக்கின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காது எனவும் தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்த உதவாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைளை நிறைவேற்ற முடியும் என்ற ஈ.பி.டி.பி.கட்சியின் நீண்டகால நிலைப்பாடு குறித்த ஆவணத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்துவதற்கு சாத்தியமான 3 கட்டப் பொறிமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு சீனாவின் முதலீடுகள் மிகவும் முக்கியமானவை

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சீனாவின் முதலீடுகள் மிகவும் முக்கியமானவை. சீனாவிடமிருந்து இலங்கைக்கு அதிக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம் என பிரதமர் தினேஷ் குணவரத்தன தெரிவித்தார்.

சீனாவின் குன்மிங்கில் நேற்று முன் தினம் ஆரம்பமான சீன வர்த்தக அமைச்சும் யுனான் மாநில அரசும் இணைந்து ஏற்பாடு செய்த 7ஆவது சீன-தெற்காசிய கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த நாம் ஒன்றிணைவதற்கான இந்த வாய்ப்பு எமது இருதரப்பு உறவுகளில் மற்றொரு வரலாற்று மைல்கல்லை குறிக்கிறது.

இலங்கையும் சீனாவும் பல நூற்றாண்டுகளாக நட்புறவுடன் பிணைந்துள்ளன. இந்த வரலாற்று உறவானது கடல்சார் பட்டுப்பாதையில் செழிப்பான வர்த்தக பரிமாற்றங்கள் மற்றும் கலாசாரம் மற்றும் அறிவு என்ற விரிந்த ஒத்துழைப்பினால் போஷிக்கப்பட்டதாகும்.

எமது இரு நாடுகளும் சுமார் 66 ஆண்டுகளாக சிறந்த இராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றன. நாங்கள் முறையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு முன்பே, மேற்கத்திய நாடுகள் சீனாவுடன் வர்த்தகம் செய்யத் தயங்கிய சந்தர்ப்பத்தில் சீனாவும் இலங்கையும் இறப்பர் - அரிசி ஒப்பந்தத்தை செய்துகொண்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்கு கடந்த ஆண்டுடன் 70 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

அப்போதிருந்து, சீனாவும் இலங்கையும் ஒருவரையொருவர் நல்ல நண்பர்களாகக் கருதுகின்றன. மேலும் எங்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு விசேட உறவு உள்ளது. சவாலான காலகட்டங்களில் தொடர்ந்தும் எம்முடன் நின்று சீன மக்கள் குடியரசு வழங்கி வரும் தளராத ஆதரவுக்கு இலங்கையர்களான நாம் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த நான்கு தசாப்தங்களில், சீனா சுமார் 800 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது. இது உலகளாவிய வறுமைக் குறைப்பில் 75 வீதத்துக்கும் அதிகமாக உள்ளது. உண்மையில் இது ஒரு பெரிய சாதனை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் சீனா மிகவும் தேவையான ஆதரவை வழங்கியுள்ளமையை நாங்கள் பாராட்டுகிறோம். மேலும் எதிர்காலத்தில் இலங்கையின் பரந்த பொருளாதார கொள்கையில் சீனா தொடர்ந்து ஒத்துழைப்பையும் நெகிழ்வுத் தன்மையையும் வழங்கும் என்று நம்புகிறோம்.

கடந்த காலங்களில் இலங்கை அனுபவித்த சமூக பொருளாதார குழப்பங்களை நிவர்த்தி செய்வதற்காக சீனா இலங்கைக்கு வழங்கிய மனிதாபிமான உதவிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக சினோபார்ம் தடுப்பூசி, முகக் கவசங்கள், கொவிட்-19 பரிசோதனைக் கருவிகள் மற்றும் ஏனைய சுகாதார உபகரணங்களை அனுப்பிவைத்ததன் மூலம் இலங்கைக்கு மனிதாபிமான உதவி மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளை சீனா துரிதப்படுத்தியது.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சீனாவின் முதலீடுகள் மிகவும் முக்கியமானவை. மேலும் சீனாவிடமிருந்து இலங்கைக்கு அதிக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம் -என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
18.08.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் அறிவுரை உணர்த்துவது?

எதிர்காலத்தை கையாளுவதற்கு ஹிந்தி மற்றும் சீன மொழியை கற்குமாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். பாடசாலை நிகழ்வொன்றில் பங்குகொண்டு பேசுகின்றபோதே அவர் இந்தக் கருத்தைக் கூறியிருக்கின்றார். இதன்மூலம், இலங்கைத் தீவில் இந்தியாவும் சீனாவும் ஏதோவொரு வகையில் செல்வாக்குச் செலுத்தும் நாடுகளாக இருப்பதை, எக்காலத்துக்கும் தவிர்க்கவே முடியாதென்பதைத்தான் ரணில் சுட்டிக்காட்ட முற்படுகின்றாரா?

இதேவேளை, உலகின் அரசியல் மற்றும் பொருளாதார மையமாக ஆசியப் பிராந்தியம் எழுச்சியடைந்துவரும் நிலையில் இந்தியாவும் சீனாவும் பிரதான பங்கை வகிக்கப்போகின்றன. எனவே, இவ்வாறானதொரு சூழலில் நன்மைகளை பெற வேண்டுமாயின், வழமையான ஆங்கிலக் கல்விக்கு மாறாக ஹிந்தி மற்றும் சீன மொழியையும் அடுத்த தலைமுறை கற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவருகின்றது என்னும் கருத்தும் ரணிலின் கூற்றுக்கு பின்னால் உண்டு.

ரணிலின் புதுடில்லி பயணத்தின்போது, சில முக்கிய திட்டங்கள் தொடர்பில் உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. இதில் பாக்கு நீரிணையை ஊடறுக்கும் வகையிலான பாலம் மற்றும் தென்னிந்தியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பெற்றோல் குழாய்களை நிர்மாணிக்கும் திட்டங்கள் மிக முக்கியமானவை. இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை மேற்படி திட்டங்கள் ஏற்படுத்தக்கூடுமென்னும் எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அதில் கல்லை எறியும் வகையில் சீனாவின் யுத்தக் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டது. ஒக்ரோபர் மாதம் மீண்டும் சீனாவின் உளவுக் கப்பலொன்றும் இலங்கைக்கு வரவுள்ளது. தற்போது, தென்சீனக் கடலில், அது நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் கவலைகளை மீறியே முன்னரும் சீனாவின் உளவுக் கப்பலொன்று, அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்பட்டது. தற்போது மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவுள்ளது. இதனை இந்தியாவால் எந்தளவு தூரம் தடுக்க முடியுமென்பதற்கப்பால் சீனாவின் நகர்வுகளை இலங்கையால் எந்தளவுக்கு தடுக்க முடியுமென்பதும் அடுத்த கேள்வியாகும். ஏனெனில், இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் சீனாவை அதிகம் நாட்டுக்குள் விட்டுவிட்டனர் - சீனா அதிகம் காலூன்றிவிட்டது. இதேவேளை, இந்தியாவின் பாரம்பரிய செல்வாக்கு எல்லைக்குள் - அதன் செல்வாக்கை அதிகரிக்கும் திட்டமிட்ட நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான அதிகார மோதல்களின்போது, நடுவில் நிற்கும் அதேவேளை இருவரையும் அரவணைத்து நன்மைகளை பெறும் உத்தியை பற்றியே கொழும்பின் ஆளும் தரப்பு சிந்திக்கின்றது. மாணவர்கள் ஹிந்தியையும் சீன மொழியையும் படிக்க வேண்டுமென்று கூறுவதிலும் இருவரும் தேவையென்னும் அணுகுமுறையே மேலோங்கியிருக்கின்றது. ஆனால், இவ்வாறான - இருவரையும் அரவணைக்கும் அணுகுமுறை மூலம், இலங்கை எந்தளவுக்கு - எவ்வளவு காலத்துக்கு பயணிக்க முடியும் - இதேவேளை, இந்த அணுகுமுறையை எந்தளவுக்கு - எவ்வளவு காலத்துக்கு இந்தியாவால் ஒரு நட்பு நாடென்னும் எல்லைக்குள் விடயங்களை கையாள முடியும்? இந்தக் கேள்விக்கான பதிலில்தான் இலங்கையின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

# 13ஆம் திருத்தம் குறித்து ஜனாதிபதியிடம் யோசனைகள் சமர்ப்பித்த பிரதான கட்சிகள்

கொழும்பு, ஓக. 18

நாட்டின் பிராதான அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலான தமது முன்மொழிவுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய குடியரசு முன்னணி, தமிழ்த் தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, யுதுகம அமைப்பு உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் தமது யோசனைகளை ஜனாதிபதி செயலகத்தில் வழங்கியுள்ளன.

கட்சிகள் தமது முன்மொழிவுகளில் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம், கல்வி, சுகாதாரம், தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் தொடர்பில் அதிகம் அவதானம் செலுத்தியுள்ளன என்று ஜனாதிபதி செயலக வட்டாரத்தில் அறிய முடிகிறது.

கட்சிகளின் நிலைப்பாடுகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் அவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

கடந்த ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வக்கட்சிக் கூட்டத்தில் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமது நிலைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கட்சிகளுக்கு ஜனாதிபதி கோரியிருந்தார். அதன் பிரகாரம் கட்சிகள் தமது யோசனைகளை சமர்ப்பித்துள்ளன.

சுதந்திரக் கட்சி உட்பட சில கட்சிகள் சர்வகட்சிக் கூட்டத்தின்போதே தமது யோசனைகளை சமர்ப்பித்திருந்தன.

விரைவில் மீண்டுமொரு சர்வகட்சிக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுவார் எனவும் அறிய முடிகிறது.

அரசியலமைப்பில் உள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது ஜனாதிபதியின் கடமை என்பதன் பிரகாரம், பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுப்பதாக கடந்த சர்வகட்சி கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். (அ)

## 13ஐப் பயன்படுத்தி மொட்டு கட்சியினருக்கு அமைச்சு பதவி

### சரித்த ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 18

13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பான யோசனை ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்களுடன் கூடிய அமைச்சு பதவிகளை அறிமுகப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மொட்டுக் கட்சியை சேர்ந்த 45 பேருக்கு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொடுக்கவே அவர் இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொட்டுக் கட்சியை சேர்ந்த 45 பேருக்கு அமைச்சு பதவிகளை வழங்கவே ஜனாதிபதி, 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் அது தொடர்பான யோசனைகள் குறித்த வாத விவாதங்களை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களையும் பொதுஜன பெரமுனவையும் ஏமாற்றியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தனது இந்த செயல்பாடுகள் மூலம் எண்ணக்கரு ரீதியிலான ஏமாற்றுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இதற்கு முன்னர் எண்ணிக்கை தொடர்பான ஏமாற்று திட்டங்களே நாட்டில் இருந்தன. அதனையும் ஜனாதிபதி தற்போது புதுப்பித்துள்ளார். இதனால், ஜனாதிபதி மக்கள் ஆணையின்றி செய்து வரும் வேலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

## நெடுந்தீவில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 18

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9.05 மணிமுதல் 10.35 மணி வரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறும் இக் கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி, நாளைய தினமும் நடைபெறும். இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.05 முதல் இரவு 7.35 மணி வரையுள்ள சுப வேளையில் கலச ஸ்தாபனம் நிகழும்.

ஊரெழு 'குருவம்ச சிகாமணி' சிவசிறீ சோ. வாகீஸ்வர குருக்கள் தலைமையில் இக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. (அ)

## யாழ். இளைஞர் கனடாவில் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 18

கனடாவில் தமிழ் இளைஞன் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார்.

வடமராட்சி - வல்வெட்டித்துறை - தீருவிலை சேர்ந்த ரகுபதி ஆனந்த் (வயது-31) என்பவரே இவ்வாறு உயிரிழநதார்.

குறித்த நபர் 16 ஆவது மாடியில் இருந்து குதித்து உயிரிழந்தார். அவர் மேலிருந்து விழும்போது இன்னொருவர் மீது மோதுண்டமையால் அவரும் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



தமிழ்நாடு



ஓகஸ்ட் - 18 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சூன்ய




**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பொருட்கள் வாங்குவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் லாபம் அடைவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். நண்பர்களால் பிரச்னைகள் வரக்கூடும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். சோர்வு வந்து நீங்கும். முன்னேறும் நாள்.

**துலாம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். மனைவி வழியில் மதிக்கபடுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. நீண்டநாட்களாக நினைத்த இடத்திற்கு சென்று வருவீர்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்து கொள்ளாதீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உயரதிகாரி கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சொத்து சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

# சாதிய வன்முறையை கண்டித்து சிறுத்தைகள் கட்சி போராட்டம்!

சென்னை, ஓக. 18

நாங்குநேரி சாதிய வன்முறையை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் போராட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் பள்ளி மாணவர் சின்னதுரை மற்றும் அவரது சகோதரி ஆகியோர், சக மாணவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகினர். இதில் காயமடைந்த இருவரும் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்கள் மீது சாதிய ரீதியில் தாக்குதல் நடத்தப்பட்டதாக கண்டனம் தெரிவித்து, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கான திகதி மாற்றப்பட்டுள்ளதாக கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பதிவில், “மாணவர் சின்னதுரை, அவரது சகோதரி சந்திராசெல்வி ஆகியோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து வரும் 21ஆம் திகதி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திருநெல்வேலியில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. வரும் 20ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த ஆர்ப்பாட்டம், 21ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

# அ. தி. மு. க. மாநாட்டை கண்டு தி. மு. க. ஸ்டாலின் பயந்துவிட்டார்!

## எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஓக. 18

அ. தி. மு. கவின் மதுரை மாநாட்டை கண்டு அஞ்சியே தி. மு. க. உண்ணாவிரத போராட்டம் நடத்துகிறது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று விமான நிலையத்தில் அவர் கருத்து வெளியிடுகையில்,

மதுரையில் வரும் 20ஆம் திகதி (நாளை மறுநாள்) பொன் விழா எழுச்சி மாநாடு பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. தமிழகம் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் வியக்கும் வகையில் இந்த மாநாடு நடைபெறும். மாநாட்டில் சுமார் 15 இலட்சம் பேர் பங்கேற்பார்கள். இந்த மாநாட்டை கண்டு பயந்து நடுங்கிப்போய், என்ன செய்வது என்று தெரியாமல் நீட் பரீட்சையை மையமாக வைத்து உதயநிதி ஸ்டாலின் அங்கு உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்திருக்கிறார்.

இது வேண்டும் என்றே திட்டமிட்டு செய்யப்படுகிறது. சட்டசபை தேர்தல் பிரசாரத்தின் போது, ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை இரத்து செய்வோம் என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். இப்போது 2 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 3ஆவது ஆண்டு நடக்கிறது. இவ்வளவு நாட்கள் என்ன முயற்சி எடுத்தார்கள்? ஆனால் அ.தி.மு.க. நீட் தேர்வை இரத்து செய்ய அனைத்து முயற்சிகளும் எடுத்தது. அதே முயற்சியைதான் தி.மு.க.வும் எடுத்து வருகிறது.

இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றாக இணைந்தாவது தமிழகத்தில் நீட் தேர்வை இரத்து செய்ய, ஆதரவை கேட்டு அந்த பிரச்னையை பாராளுமன்றத்தில் எழுப்பி இருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை. 10 ஆண்டுகள் ஆனாலும் இவர்களால் நீட் தேர்வை இரத்து செய்ய முடியாது - என்றார்.(ஐ)

# நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும்!

## பா. ம. க. நிறுவுநர் வலியுறுத்து

சென்னை, ஓக. 18

உச்சநீதிமன்றம் மூலமாகவே சென்னை உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடங்க வேண்டும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை அனைத்து மொழிகளிலும் மொழிமாற்றம் செய்வதுதான் உச்சநீதிமன்றத்தின் நோக்கம் என்றும், அதன் ஒரு கட்டமாக இதுவரை மொத்தம் 9,423 தீர்ப்புகள் 14 மொழிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தெரிவித்திருக்கிறார்.

நீதித்துறையில் மாநில மொழிகளின் பயன்பாடு குறித்து உச்சநீதிமன்றம் காட்டும் அக்கறை மிகவும் பாராட்டத்தக்கதாகும். 5 ஆண்டுகளில் 128 தீர்ப்புகள் மட்டுமே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது வருத்தமளிக்கும் உண்மைதான் என்றாலும், மாநில மொழிகளில் தீர்ப்புகள் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதில் தலைமை நீதிபதி ஆர்வம் காட்டுவது மனநிறைவை அளிக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடும் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பாட்டாளி மக்கள் கட்சியும் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. உச்சநீதிமன்றம் மூலமாகவே சென்னை உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடங்க வேண்டும். இதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாய்வு செய்து தமிழக அரசு தீர்மானிக்க வேண்டும். தேவைப்பட்டால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்க முன்வர வேண்டும் - என்றார்.

(ஐ)

# தமிழில் பெயர் பலகை வைக்காத நிலையங்கள் மீது நடவடிக்கை!

புதுக்கோட்டை, ஓக. 18

தமிழில் பெயர்ப் பலகை வைக்காத வணிக நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் புதன்கிழமை அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தமிழில் பெயர்ப் பலகை வைக்காத கடைகள், வணிக நிறுவனங்கள் மீது தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் துறையும் அவ்வப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அந்த நடவடிக்கை தொடரும்.

அதேபோல, தமிழில் கையொப்பமிடாத அரசுத் துறை அலுவலர்கள் குறித்தும், கோப்புகள் வரும்போதே அவ்வப்போது உயர் அலுவலர்கள் அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். அந்த நடவடிக்கையும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

திருச்சி, மதுரையில் பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனை வழங்கப்பட்டு பிறகு, அரசால் அந்தப் பட்டா ரத்து செய்யப்பட்ட விவகாரங்கள் தொடர்பாகவும் வருவாய்த் துறையினருடன் இணைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் வாக்குறுதியாக தெரிவிக்கப்பட்ட பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு அலுவல் சாரா உறுப்பினர்களாக மூத்த பத்திரிகையாளர்கள் நியமிக்கப்பட்டு 3 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. தொடர்ந்து வரும் கோரிக்கைகள் குறித்து அந்தக் கூட்டங்களில் வைத்து முதல்வரிடம் கலந்து பேசி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# பிரபாகரன் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை நிறுத்துங்கள்

## புலம்பெயர் தமிழர்களிடம் கோருகிறார் பொன்சேகா

கொழும்பு, ஓக. 18

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு புலம்பெயர் தமிழர்களிடம் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார்.**

பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருக்கின்றனர் எனவும், அவர்களைத் தான் நேரில் சந்தித்தார் எனவும் வெளிநாடொன்றில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி ஒருவர் சமூகவலைத்தளங்களில் காணொளியொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். அந்த வீடியோ வைரலாகியுள்ளது. இந்நிலையிலேயே முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிப் போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துவிட்டனர். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்நிலையில், பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று ஒரு குழுவினரும், பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என்று இன்னொரு குழுவினரும் தமது சுயலாப அரசியலுக்காகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் நாம் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், உங்கள் சுயலாபத்துக்காக உயிரிழந்த பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துங்கள்-என்றார். (அ)

# காணாமல்போயுள்ள கோடீஸ்வர வர்த்தகர்!

கொழும்பு, ஓக. 18

கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக கொலொன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

கொலொன்ன நெடோல பிரதேசத்தில் வசிக்கும் கோடீஸ்வர வர்த்தகரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

குறித்த வர்த்தகர் நேற்று முன்தினம் புதன்கிழமை பணத்துடன் தனது வாகனத்தில் தெனியாய நகருக்குச் சென்றதாகவும் இவ்வாறு சென்றவர் வீடு திரும்பாததால் அவரின் மனைவி கொலொன்ன பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரவிக்கப்பட்டது.

இதேவேளை, அனில்கந்த பொது மயானத்துக்கு அருகில், வர்த்தகர் சென்ற வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

காணாமல்போன வர்த்தகரை கண்டுபிடிப்பதற்காக கொலொன்ன பொலிஸ் அதிகாரிகள் குழுவினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 45 இலட்சம் கிலோ நெல் மாத்திரமே கையிருப்பில்

கொழும்பு, ஓக. 18

நாட்டில் ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதிக்கான நெல் கையிருப்பு மாத்திரமே தம் வசம் உள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது 45 இலட்சம் கிலோ நெல் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக சபையின் தலைவர் புத்திக்க இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

நெல் கிடைக்காத காரணத்தினால் மூடப்பட்டுள்ள அம்பாந்தோட்டை நெல் களஞ்சியசாலை, விவசாய அமைப்புகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் திறப்பது தொடர்பில் ஆராயப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் பகுதியில் ஒன்றிணையவேண்டும்

## உதய கம்மன்பில அழைப்பு

கொழும்பு, ஓக. 18

குருந்தூர் மலையில் இன்று வெள்ளிக்கிழமை இந்து மத வழிபாட்டில் ஈடுபடப்போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். இந்து -பௌத்த மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்.

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களுக்கு மாத்திரம் தான் பிரச்னை உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைச் சமூகமாக வாழும் சிங்களவர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும். பௌத்த மரபுரிமைகள் முழுமையாக தமிழ்ப் பிரிவினைவாதிகளால் அழிக்கப்படும்.

2200 ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குருந்தூர் தூபியை இந்து கோயில் என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

இன்று வெள்ளிக்கிழமை குருந்தூர் மலையில் இந்து மத வழிபாட்டில் ஈடுபட போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள. ஆகவே புத்த சாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். குருந்தூர் மலையில் பௌத்த-இந்து மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# மலையகத்தின் மறுமலர்ச்சிக்கு நேசக்கரம் நீட்டுகிறது ஜப்பான்

கொழும்பு, ஓக. 18

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தம்மால் முடிந்த அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (ஜெய்க்கா) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானிடம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இலங்கையின் நீர்வளத்துறை, மலையக பெருந்தோட்ட சமூகத்தினர் எதிர்நோக்கும் சவால்கள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தற்போதைய செயல்திறன் மற்றும்



அதனை எவ்வாறு மேம்படுத்துதல் என்பது குறித்தும் சுகாதார பாதுகாப்பான நீர் உற்பத்தி ஆற்றல் தேவையை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டன. சூரிய சக்தி மின் திட்டத்துக்கான முதலீடுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பம் பற்றி ஆராய்கையில், ஜப்பானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்க ஜெய்க்கா பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

பெருந்தோட்டத்துறையின் மறுசீரமைப்பு தொடர்பான தமது திட்டத்தை அமைச்சர் இதன்போது தெளிவுபடுத்தினார். பெருந்தோட்டத்துறை மக்கள் எதிர்நோக்கும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட இதர பிரச்னைகளும் சுட்டிக்காட்டப்பட்டன. மலையக மாற்றத்திற்கான புதிய திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

தொழிலாளர்களின் கௌரவத்தை உயர்த்துவதற்கும் தோட்டத் துறையில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அமைச்சரின் அர்ப்பணிப்பு அனைத்துத் தரப்பினரிடமும் ஆழமாக எதிரொலித்தது. மலையக மக்களின் வரலாற்று ரீதியிலான பங்களிப்பை ஆவணப்படுத்துவதற்கான திட்டம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்ட சமூகங்களின் நிலைமைகளை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு தமது முழு ஆதரவு வழங்கப்படும் எனஜெய்க்கா பிரதிநிதிகள் சந்திப்பில் உறுதியளித்துள்ளனர். (அ)

# விசேட தேவையுடையவர்களின் நலன்புரி கொடுப்பனவு உயரும்

கொழும்பு, ஓக. 18

விசேட தேவையுடையோர் நலன்புரிக்காக ஒதுக்கப்படும் கொடுப்பனவுகளை இந்த ஆண்டு முதல் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி



விக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விசேட தேவையுடையோருக்கான கல்வி உதவித் தொகை 10 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும்.

விசேட தேவையுடையோருக்கான சுயதொழில் உதவித் தொகை 25 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும்.

விசேட தேவையுடையோருக்கான உபகரணங்களுக்காக வழங்கப்படும் 15 ஆயிரம் உதவித் தொகை 35 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டும்.

விசேட தேவையுடையோருக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா உதவித் தொகை 5 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

விசேட தேவையுடையோர்களின் வீடுகளை புனரமைக்க வழங்கப்பட்ட 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா உதவித்தொகை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும்.

விசேட தேவையுடையோருக்காக கழிப்பறை கட்ட வழங்கப்படும் உதவித்தொகை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படும்-என்றார். (அ)

# ஒற்றையாட்சிக்கு பாதிப்பில்லாது மாகாண சபைகளுக்கு அதிகாரம்

## பெரமுனவின் எம்.பி. ஆலோசனை

**கொழும்பு, ஓக. 18**

**"ஒற்றையாட்சிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்வதில் பிரச்னை இல்லை. முதலில் மாகாணதேர்தலை நடத்திவிட்டு, அதன்பிறகு அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக பேசலாம்."**

**-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன.**



மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான சர்வக்கட்சி மாநாட்டில் நானும் பங்கேற்றிருந்தேன். 13 குறித்து தனித்து முடிவெடுக்கப்பட மாட்டாது, அது குறித்து பாராளுமன்றம் தீர்மானிக்கட்டும் என ஜனாதிபதி கூறிவிட்டார். எனவே, 13 ஐ முன்னோக்கிக் கொண்டு செல்வதா அல்லது என்ன செய்வது என்பது குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

மாகாணசபைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக சிற்சில அதிகாரங்களை பகிர்வதில் பிரச்னை கிடையாது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். நாடு பிளவு படாத வகையில் - ஒற்றையாட்சியை பாதுகாக்கும் வகையில் இதற்கான ஏற்பாடு இடம்பெற வேண்டும்.

அதேவேளை, நாட்டில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. அதனை நடத்தாமல் அதிகாரப் பகிர்வு பற்றி பேசி பயன் இல்லை. முதலில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அப்போது புதிதாக நியமனம் பெறும் முதல்வர்கள் உள்ளிட்டவர்களுடன் அது பற்றி பேசலாம். மாகாணசபை முறைமை என்பது 1987 இல் இருந்து இருந்து வருகின்றது. அனைத்து கட்சிகளும் அந்த முறைமையை ஏற்றுக்கொண்டுள்ளன-என்றார்.

(அ)

# முன்பள்ளிக் கல்வி முறையில் மிகவிரைவில் மாற்றம் வரும்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஓக. 18

சர்வதேச தரத்திற்கு அமைவாக முன்பள்ளிக் கல்வி முறையைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐந்து பிரிவைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் தரம் 1 இற்கு வருகிறார்கள். ஒரு முன்பள்ளி பள்ளி அனைத்து செயல்பாடுகளையும் கற்றுத் தருகிறது.

மற்றொரு முன்பள்ளி ஒன்றிலிருந்து 10 வரையான எண்களைக் கற்றுக்கொடுக்கிறது. மற்றொன்று 100 வரை கற்றுக்கொடுக்கிறது.

அவர்கள் அனைவரும் தரம் ஒன்றுக்கே வருகின்றனர். இப்போது ஜப்பானில் இவை அனைத்தையும் கற்பிக்கிறார்கள். அதுதான் உலக தர அமைப்பு.

எனவே, தேசிய கல்வி அல்லது சர்வதேச தரத்திற்கு ஏற்ப இரண்டு வருட முன்பள்ளிக்கான கட்டமைப்பை உருவாக்கவேண்டும்.

பயிற்சியற்றவர்களுக்கு பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்க வேண்டும்.

பயிற்சி இல்லாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முறையான பயிற்சி அளிக்கப்பட்டு அந்த நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும்.

அவர்கள் முன்பள்ளிக்கு தகுதியானவர்களா என்பதை உறுதி செய்ய வேண்டும். சாதாரண தர பரீட்சையில் தோல்வியடைந்தவர்களும் கிராமங்களில் உள்ள 15 முதல் 20 மாணவர்களை சேர்த்து முன்பள்ளியைத் ஆரம்பியுங்கள்.

இதற்காக சிறுவர் விவகார அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் கல்வியாளர்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன்.

அதிக நேரம் இல்லை. இப்போது நீங்கள் அதை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். டிப்ளோமா கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

நாங்கள் சான்றளிப்பவர்கள் மாத்திரமே முன்பள்ளியைத் தொடங்க முடியும்-என்றார்.

# பயங்கரவாதம் புரியும் அரசுடன் எவ்வித உடன்பாடும் கிடையாது!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 18

மக்களை ஒடுக்கி அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்து வரும் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் எந்தவித உடன்பாடோ அல்லது இணக்கப்பாடோ இல்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தீவிர இடதுசாரி அல்லது தீவிர முதலாளித்துவ கொள்கையை விடுத்து மூன்றாவது வழியை பின்பற்றும் கட்சியாக இந்நாட்டு மக்களின் மனித உரிமைகள் மட்டுமன்றி பொருளாதார, சமூக மற்றும் அரசியல் உரிமைகளையும் பாதுகாத்துக் கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் கலந்துரையாடிய போதிலும் முறையான மொழிக்கொள்கையை ஏற்றுக் கொள்ளத் தவறியுள்ளது.

இப்படியான பொய்யான மோசடி அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள தாங்கள் தயாராக இல்லையென்றாலும், நாட்டுக்கு சாதகமான மற்றும் சரியான முடிவுகள் எடுக்கப்படும் இடத்தில் பதவிகள் சலுகைகளை நிராகரித்து சரியான



நிலைப்பாட்டில் நிற்கின்றோம்.

தொழிலாளர் சமூகத்திற்கு எதிரான அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட யோசனைகளில் உள்ள மனிதாபிமானமற்ற முன்மொழிவுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சர்வதேச உடன்பாடுகள் மற்றும் கொள்கைகளை மீறி, மொழிக் கொள்கைகளை மீறி, அரசியலமைப்பை மீறி அடிப்படை உரிமைகளை மீறிய அரசாங்கம் முன்வைத்திருக்கும் மக்கள் விரோதப் பிரேரணைகளை வன்மையாக நிராகரிக்கின்றோம்.

இங்கு மனிதாபிமானமற்ற முதலாளித்துவமே நிலவுகின்றது.

இந்நாட்டின் உழைக்கும் மக்கள் பாதுகாக்கப்படுவது வேலைவாய்ப்பினால்தான் அன்றி வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அல்ல.

எனவே செல்வத்தை உருவாக்குவதற்கு அதிகபட்ச ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும்.

இதற்கு திறமையான மற்றும் இயலுமை கொண்ட பணியாளர்கள் தேவை. அவ்வாறு உருவாக்கப்படும் செல்வத்தை சமூக நீதியின் அடிப்படையில் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கவேண்டும்-என்றார்.

(அ)

# காணிகள் விடுவிப்பை துரிதப்படுத்தவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன்



முல்லைத்தீவு, ஓக. 18

அண்மைக்காலமாக தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வரும் நிலையில் காணி விடுவிப்பு என்பது நல்ல விடயமாகப் பார்க்கப்படுகின்றது எனவும், இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று முல்லைத்தீவிலே காணி விடுவிப்பு சம்மந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதத்தின் முடிவிலே இடம்பெறும் பிரச்னைகளை அனுப்ப வேண்டிய தேவை இருக்கின்றபடியால் இந்தக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

வன இலாகா பொறுப்பதிகாரிகள் இங்கே அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த அடிப்படையில் மாவட்ட செயலகம் கொடுத்த பல இடங்களில் தற்போது சில இடங்கள் விடுவிக்கின்ற முடிவை எட்டியிருக்கின்றன.

அதேபோல் விடுவிக்கப்பட வேண்டிய காணிகளாக இருந்தாலும் இங்கு இருக்கின்ற அதிகாரிகளினால் இயலாத ஒரு நிலை ஏற்படுகின்றபோது அதனை நடுவர் குழுவுக்கு அனுப்புவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எங்களை பொறுத்தமட்டில் இந்த விடயங்கள் நடைமுறைக்கு வரவேண்டும் என்பதனை பெரிதாக எதிர்பார்க்கின்றோம்.

ஏனென்றால் இது மக்களுடைய காணிகள் ஏற்கனவே திட்டமிட்டு அபகரிக்கின்ற நிலைகள் இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் விடுவிப்பு என்பது உண்மையிலே நல்ல விடயமாக பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.இது நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

கூட்டம் போட்டு பேசி முடிவுகளை எடுத்ததன் பின் மீண்டும் அந்த மக்கள் அங்கே செல்கின்றபோது கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்புகின்ற செயற்பாடுகள் இருக்கக்கூடாது என்பது எங்கள் எண்ணமாக இருக்கின்றது.

அந்தவகையிலே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைப்படுத் தப்பட வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் கோரியிருக்கின்றோம்.

பல விடயங்களை ஆராய்ந்து உடனுக்குடன் தீர்வுகளை கண்டிருக்கின்றோம். அது நடைமுறைப்படுத்தப்ப டவேண்டும்-என்றார்.

(அ)

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு?

கொழும்பு, ஓக. 18

இந்தியாவில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியபோதிலும், அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கோதுமை மா இறக்குமதிக்கு உரிமம் தேவை எனக் கூறி, கடந்த ஜூலை 14ஆம் திகதி முதல் இந்தியாவில் இருந்து கோதுமை மா இறக்குமதியை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் இடைநிறுத்தியுள்ளதாகவும், இதனால் கோதுமை மாவை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையினால் எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு அல்லது கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என இறக்குமதியாளர்கள் மேலும் கூறினர்.

(அ)

# வீட்டு உரிமையாளர் முன்பாகவே கைவரிசையை காட்டும் திருடர்கள்!

## இராணுவம், பொலிஸார் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஒக. 18

**காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகவும் பொலிஸார் திருட்டுக்களை கட்டுப்படுத்த தவறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.**

**கடந்த 33 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.**

அதனால் அந்தக் காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்புத் திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளை திருடிச் சென்றனர்.

அது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலர், காங்கேசன்துறை பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு பல தடவைகள் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தும் திருட்டைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இரும்புத் திருடர்கள் சுதந்திரமாக அப்பகுதிகளில் நடமாடித் திரிகின்றனர்.

பிரதேச செயலரிடம் முறையிட்டபோ, இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக தம்மிடம் அப்பகுதியை கையளிக்காத நிலையில் தாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என முறைப்பாட்டாளர்களுக்கு தெரிவிக்கின்றார்.

பொலிஸாரிடம் முறையிட்டோருக்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக கூறியபோதிலும், அப்பகுதியில் கண்காணிப்புக்கு சுற்றுக்காவல் பகுதியில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கண் முன்னால் இரும்புத் திருடர்கள் திருட்டில் ஈடுபடுகின்றனர். அது தொடர்பில் பொலிஸாரிடம் கேட்டபோது , பழைய இரும்புகள் தானே அவர்கள் கொண்டு செல்லட்டும் என பதில் அளித்துள்ளனர்.



இவ்வாறாக பொறுப்பு வாய்ந்தோர் திருட்டைக் கட்டுப்படுத்த, நடவடிக்கை எடுக்கத் தவறி வரும் நிலையில் தற்போது வீட்டின் பாகங்களை உடைத்து திருட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்து வீட்டு உரிமையாளர்கள் தமது காணிக்குள் வரும் போது , இரும்புத் திருடர்கள் தம்மை புலனாய்வு பிரிவினர் எனக் கூறி , காணி இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டினுள் தான் இருக்கிறது. இதற்குள் நீங்கள் வரக்கூடாது என அச்சுறுத்தி அனுப்பிவிட்டு, உரிமையாளர் கண்களுக்கு முன்னாலையே வீடுகளை உடைத்து இரும்புகளை திருடிச் செல்கின்றனர்.

பிரதேச செயலரோ, இராணுவத்தினரோ, பொலிஸாரோ திருட்டுக்களை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருப்பதால், உரிமையாளர் கண்களுக்கு முன்னாலையே திருடர்கள் திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் யாரிடம் இனி முறையிடுவது என தெரியாத நிலையில் தமது கண்களுக்கு முன்னால் தமது வீடுகளை உடைத்து திருடுபவர்களை கண்ணீர் மல்க உரிமையாளர்கள் பார்த்து மனம் நொந்து வருகின்றனர். (அ)

# பாராளுமன்ற வளாகத்தில் பாலியல் துன்புறுத்தல் விசாரணையில் மெத்தை, தலையணைகள் மீட்பு!

கொழும்பு, ஒக. 18

பாராளுமன்ற வளாகத்தில் உள்ள குழு அறையில் இரண்டு தலையணைகள் மற்றும் ஒரு மெத்தை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அவை எதற்காகக் கொண்டு வரப்பட்டன என்பது குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாக சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற அதிகாரி ஒருவர் குழு அறைகளை ஆய்வு செய்தபோது இந்த இரண்டு தலையணைகளும் மெத்தையும் கண்டெடுக்கப்பட்டன.

பாராளுமன்றத்தின் பராமரிப்பு திணைக்களத்தின் சில இளம் பெண் ஊழியர்கள் பாலியல் ரீதியாக மேலதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு அதன் விளைவாக குழு அறைகள் சமீபத்தில் சோதனை செய்யப்பட்டன.

இதற்கிடையில், பாலியல் புகார்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

இது தொடர்பாக பெண் ஊழியர்கள் உட்பட கிட்டத்தட்ட 20 பேரிடம் குழு ஏற்கனவே வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, இந்த விசாரணைகளை சீர்குலைக்கவும் செல்வாக்கு செலுத்தவும் பாராளுமன்ற அதிகாரிகள் குழுவொன்று முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (அ)

# பதவி உயர்வு பெற்ற மறுநாளே ஓய்வு! மின்சார சபைக்குள் தில்லுமுல்லுகள்!!

கொழும்பு, ஒக. 18

இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை அதிகாரி ஒருவருக்கு ஓய்வு பெற இன்னும் ஒரு நாள் உள்ள நிலையில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 14ஆம் திகதி மேலதிக பொது முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரி, மறுநாள் ஓய்வு பெற்றதாக கூறப்படுகிறது.

மின்சாரசபை பொறியியலாளர் சங்கத்தின் பலமான செல்வாக்கு காரணமாக அதிகாரிக்கு உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக பொது முகாமையாளர் பதவிக்கு அதிகாரியை நியமிக்குமாறு கோரி பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் மின்சார சபைத் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த அதிகாரி நியமிக்கப்பட்ட மறுநாளே புதிய பதவிக்கான அனைத்து சலுகைகளுடன் ஓய்வு பெற்றார். (அ)

# ஏற்றுமதி அபிவிருத்தி சபை வசமானது தேசிய பொதியிடல் மத்திய நிலையம்

கொழும்பு, ஒக. 18

தேசிய பொதியிடல் மத்திய நிலையம் ஒன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குள் நிறுவப்பட்டுள்ளது.

உள்ளூர் பொதியிடல் உற்பத்தித்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பொதியிடல் உற்பத்தி மூலம் ஏற்றுமதி பொருட்களுக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைப்பதற்கு இந்த பொதியிடல் மத்திய நிலையம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# மிகக்குறைந்த வருமானத்தை கொண்ட நாடானது இலங்கை

கொழும்பு, ஒக. 18

தெற்காசியப் பிராந்தியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாக வெரிடே ரிசேர்ச் என்ற நிறுவனம் முன்னெடுத்துள்ள ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த 17 வருடங்களில் இலங்கை தமது வருமான இலக்குகளை அடையத் தவறியுள்ளதாக அந்த நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தில் வருவாயை அதிகரிப்பதற்கான உடன்பாட்டையும் இலங்கை உள்ளடக்கியுள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் வருமான இலக்குகள் தொடர்பான 12 நிகழ்ச்சி திட்டங்களில் 3 திட்டங்களை மட்டுமே இலங்கை எட்டியுள்ளதாக வெரிடே ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்க வருவாயை ஈட்டுவதில் வரி வருவாய் கணிசமான பங்கை வகிக்கிறது எனவும் இந்த ஆண்டு வரி வருவாய் மூவாயிரத்து 130 பில்லியன் ரூபாவாக இருக்கும் எனவும் அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருட இறுதிக்குள் இலங்கை அரசாங்கத்தின் கணிப்பை விட குறைந்த வருமானத்தை அதாவது 2 ஆயிரத்து 940 பில்லியன் ரூபா வரி வருவாயைப் பெறும் என சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது.

எனினும், வருடத்தின் முதல் காலாண்டில் 578 பில்லியன் ரூபாய் மாத்திரமே உண்மையான வரி வருவாயாக வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்படி வருட இறுதிக்குள் 2 ஆயிரத்து 762 பில்லியன் ரூபாவை மட்டுமே ஈட்டமுடியும் எனவும் வெரிடே ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கடும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் 52,000 குடும்பங்கள்!

கொழும்பு, ஒக. 18

நாடளாவிய ரீதியில் 52,435 குடும்பங்களைச் சேர்ந்த 81, 671 பேர் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

வறட்சியான காலநிலையால் குருநாகல் மாவட்டம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு சொந்தமான 200 தண்ணீர் தாங்கி ஊர்திகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க தெரிவித்தார். (அ)

# ரணிலின் ஆதரவாளர்களுடன் மைத்திரிபால கலந்துரையாடல்

கொழும்பு, ஒக. 18

சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விஷேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் கொழும்பு - ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, சுதந்திர கட்சியின் வருட பூர்த்தி கொண்டாட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுதவிர, நாட்டின் தற்போதைய நிலவரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# ஒவ்வொரு 8 ஆண்டுகளிலும் நீங்கள் இறப்பதற்கான வாய்ப்பு இரட்டிப்பாகும்?

இயற்கைக்குள் எல்லாம் இருக்கிறது. அவற்றில் அதன் படைப்புகள் எத்தனை ஆண்டுகள் வாழும் என்பதும் அடக்கம்.

மேஃபிளை என்று அழைக்கப்படும் எபிமெரோப்டெரா, வெறும் 24 மணிநேரம் மட்டுமே வாழும் போது, டர்ரிடோப்சிஸ் டோர்னி என்ற ஜெல்லி மீனும் அதன் பெயருக்கு ஏற்றவாறு வாழ்கிறது.

சிறிய மற்றும் வெளிப்படையான, இந்த உயிரினங்கள் அசாதாரண உயிர்வாழும் திறன்களைக் கொண்டுள்ளன. இவை உடல் ரீதியாக பாதிக்கப்படும்போது, பட்டினி கிடக்கும் போது, அல்லது மன அழுத்தத்தின் போது தங்களின் பழைய இளமையான தோற்றத்தைப் பெறுகின்றன. இதை கோட்பாட்டளவில் சொன்னால், இந்த உயிரினங்கள் எப்போதும் வாழ முடியும்.

மான்டெய்க்னே என்ற தத்துவஞானி கூறியது போல், 'மரணம் எல்லா நேரங்களிலும் நம்மை நெரிக்கிறது," என்று மனிதர்கள் அறிந்தவரை எதையும் தாமாகத் தீர்மானிக்கும் நிலை நம்மிடம் இல்லை.

உண்மையில், நமக்குத் தெரிந்த மிகப் பழமையான கதையான, 'கில்காமேஷின் காவியம்", அந்த ஏக்கத்தைப் பற்றியது.

நான்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மெசபடோமியாவில் இருந்த களிமண் பொருட்களில், மரணத்தை வெல்வதற்கான வழியைத் தேடி மன்னர் கில்காமேஷ் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர் கண்டறிவது வாழ்க்கையின் அர்த்தம்:

"மனிதர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், பிறகு இறக்கிறார்கள்."

"இது கடவுள்கள் விதித்த உத்தரவு."

"அதனால் முடிவு வரும் வரை, உங்கள் வாழ்க்கையை அனுபவித்துக் கொள்ளுங்கள்."

'உங்கள் வாழ்க்கையை விரக்திக்காக அல்ல; மகிழ்ச்சிக்காக செலவிடுங்கள்."

எது எப்படியென்றாலும், அவரது அறிவுரை கவனிக்கப்படாமல் போய்விட்டது. இன்றுவரை இந்த பூமியைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சி மையங்களில் ஏராளமான விஞ்ஞானிகள் உள்ளனர். அவர்களின் நோக்கம் மன்னர் கில்காமேஷின் நோக்கத்தை ஒத்திருக்கிறது.

எல்லா முயற்சிகளும் இருந்தபோதிலும், இந்த நேரத்தில், 2019, உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி நமது உலகளாவிய சராசரி ஆயுட்காலம் 73.4 ஆண்டுகளாக உள்ளது.

வாழும் காலம் அதிகரித்துள்ள போதிலும், வாழ்க்கை மற்றும் இறப்பு பற்றிய ஒரு நடைமுறை ஒன்று உள்ளது, அது கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது.

**தவிர்க்க முடியாதவற்றின் முரண்பாடுகள்**

சுவாரஸ்யமாக, மனிதர்கள் எத்தனை ஆண்டுகள் வாழ்வார்கள் என்பது தொடர்பான இந்த கோட்பாடு மரணமற்ற நிலையை அல்லது குறைந்த பட்சம் ஆயுளை நீட்டிக்க முயற்சித்த அறிவியலிலிருந்து வந்தது அல்ல. ஆனால் நீண்ட ஆயுட்காலம் என்ற விஷயத்திலும் ஆர்வமுள்ள மற்றொரு அறிவுத் துறையிலிருந்து வந்தது: அது தான் உண்மைகளை அறியும் அறிவியல்.

இது முக்கியமாக காப்பீடு மற்றும் நிதி சார்ந்த தொழில்களில் இடர் மதிப்பீட்டை முடிவு செய்யும் போது அது சார்ந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் குறிப்பாக, ஒரு முதலீட்டின் போது அத்தொழில் சார்ந்த விற்பனை மற்றும் வாங்குதலுக்குப் பொருத்தமான விகிதங்களைக் கணக்கிடும் அறிவியலை நம்பகமான ஒன்றாக மாற்றுவதுதான் இந்த அறிவியலின் குறிக்கோளாக இருந்தது.

மேலும் அந்த அறிவியலுக்கு ஒரு புதிய சகாப்தத்தைக் குறித்தவர் 19 ஆம் நூற்றாண்டில் கணிதவியலாளர் பெஞ்சமின் க்ரோம்பெர்ட்ஸ் ஆவார். அவர் ஒரு காப்பீட்டு நிறுவனம் நடத்திவந்தார்.

1825 இல் லண்டனில் உள்ள ராயல் சொசைட்டி முன் "மனித இறப்பு விதியின் வெளிப்படையான செயல்பாட்டின் தன்மை மற்றும் வாழ்க்கையின் தற்செயல் சம்பவங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் ஒரு புதிய முறை," என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார்.

இது ஒரு கணித மாதிரியாகும். இது நாம் வயதாகும் போது மரண அபாயம் அதிவேகமாக அதிகரிப்பதைத் தெளிவாக விளக்குகிறது. மேலும் அந்தக் கட்டுரை இப்போது 'காம்பர்ட்ஸின் மனித இறப்பு விதி" என்று அழைக்கப்படுகிறது.

அதைப் பார்த்தவுடன் மிகவும் வெளிப்படையாகத் தான் தெரிகிறது. ஆனால், உண்மையைச் சொல்லப் போனால் அது ஓரளவுக்கு மட்டுமே வெளிப்படையாக இருக்கிறது.

பல ஆண்டுகளாக, நமது செல்கள் மெதுவாக பிரிவதை நிறுத்தி, எஞ்சியிருக்கும் செல்கள் மீது அதிக சுமையை



ஏற்படுத்துகின்றன. இது நம் உடல்கள் உயிரை இழக்கும் வரை மோசமடைந்துகொண்டே செல்கிறது.


ஆனால் இதற்கான விளக்கம் "அதிவேகமாக" என்ற சொல்லில் உள்ளது.

க்ரோம்பெர்ட்ஸ் மனிதர்களின் இறப்பு விகிதங்களைப் பற்றிய தரவுகளை ஆய்வு செய்து ஒரு முறையான வடிவத்தை உருவாக்கினார்.

இந்த கோட்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட வருடத்தில் நாம் இறக்கும் நிகழ்தகவைக் கணக்கிடுவதாகும்.

அதாவது, அடுத்த ஆண்டில் நீங்கள் இறப்பதற்கான வாய்ப்புகள் எத்தனை என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்ற வழக்கத்துக்கு மாறான கேள்வி உங்களிடம் கேட்கப்பட்டால், நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்?

உங்கள் இறப்புக்கான காரணமாக நீங்கள் எதை நினைத்தாலும், அது ஒவ்வொரு 8 ஆண்டுகளிலும் இரட்டிப்பாகும் .



நீங்கள் 25 வயதினராக இருந்தால், அடுத்த ஆண்டில் நீங்கள் இறக்கும் வாய்ப்பு மிகக் குறைவு: 0.03 வீதம், உத்தேசமாகச் சொன்னால் அது 3,000 இல் 1.

அடுத்த எட்டு ஆண்டுகள் கழித்து 33 வயதில் இது தோராயமாக 1,500 இல் 1 ஆகவும், 42 இல், 750 இல் 1 ஆகவும், அல்லது இது போல் தொடரும்.

நீங்கள் 100 வயதை அடையும் போது, 101 வயது வரை வாழ்வதற்கான சாத்தியம் 50 வீதமாக குறைந்துவிடும்.


காம்பெர்ட்ஸ் தனது இறப்புக்கான கோட்பாடுகளை முன்மொழிந்ததிலிருந்து, இறப்பு குறித்த புள்ளிவிவரங்களின் தரவுகள் அதை உறுதிப்படுத்தியுள்ளன. இது ஒரு பெரிய எண்ணிக்கையிலான நாடுகள், காலகட்டங்கள் மற்றும் பல்வேறு வகையான விலங்குகளில் கூட பொருத்தமாக உள்ளது.

உண்மையான சராசரி ஆயுட்காலம் மாறினாலும், "ஒவ்வொரு குறிப்பிட்ட வருடங்களுக்கும் ஒரு முறை இறப்பதற்கான வாய்ப்பு இரட்டிப்பாகிறது," என்ற அதே பொது விதி இன்னும் உண்மையாகவே உள்ளது.

இது, ஆச்சரியத்திற்கு கூடுதலாக, ஒரு புரியாத புதிர் என்னவென்றால், இந்த விதி ஏன் எப்போதும் பொருந்தும் விதத்தில் இருக்கிறது என்பது உறுதியாக தெரியவில்லை.

1860 ஆம் ஆண்டில் பிரிட்டனைச் சேர்ந்த வில்லியம் மேக்ஹாம், கோம்பெர்ட்ஸ் மாதிரியை மேம்படுத்துவதற்கு வயதுக்கு அப்பாற்பட்ட அதிவேக வளர்ச்சியைச் சேர்ப்பதன் மூலம் மேம்படுத்தலாம் என்று முன்மொழிந்தார்.

காம்பெர்ட்ஸ் மாதிரி, இறப்புக்கான காரணங்கள் குறைவான உள்ள நாடுகளின் இறப்பு விகிதங்களைக் கணக்கிடுவதில் நன்றாக வேலை செய்கிறது.



இருப்பினும், எங்களுக்குத் தெரிந்தபடி, நீங்கள் எவ்வளவு இளமையாக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, விபத்துகள், ஊட்டச்சத்து குறைபாடு, நோய் போன்ற பிற காரணங்களால் வாழ்க்கை எப்போதும் முடிவுக்கு வரலாம்.

காம்பெர்ட்ஸ் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார்: 'இரண்டு பொதுவாக இணைந்திருக்கும் காரணங்களின் விளைவாக மரணம் சாத்தியமாகும் ஒன்று, முன்பே அறியப்படாத ஏதாவது ஒன்றின் படி நடக்கலாம். மற்றொன்று, சீரழிவு அல்லது அழிவை எதிர்க்கும் அதிக இயலாமையினால் நடக்கலாம்,"

ஆனால் மேக்ஹாம் தான் அந்த கூறுகளை கணித சூத்திரத்தில் சேர்த்தார். இது மாதிரியில் மிகவும் மாறக்கூடிய காரணியாகும். இது சமூக பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அபாயங்களைக் குறைப்பதன் மூலம் குறைக்கப்படலாம்.

அறிவியல், மருத்துவம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், குறிப்பாக, அனைத்து நாடுகளிலும் இறப்பு விகிதங்களைக் குறைக்கின்றன.

எனவே, காப்பீட்டுகளை விற்க வடிவமைக்கப்பட்ட இந்த சட்டம், மக்கள்தொகை ஆய்வாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் மற்றும் உயிரியலாளர்கள் மற்றும் உயிரியல் வல்லுநர்களுக்கான மதிப்புமிக்க கருவியாக மாறியது.

காம்பெர்ட்ஸ்-மேக்ஹாம் இறப்பு விதியானது மனித இறப்பின் வயது இயக்கவியலை தோராயமாக 30 முதல் 80 வயது வரையிலான காலக்கட்டத்தில் மிகவும் துல்லியமாக விவரிக்கிறது.

ஆனால் சில ஆய்வுகள் வயதான காலத்தில் இறப்பு விகிதங்கள் மிகவும் மெதுவாக உயரும் என்று கண்டறிந்துள்ளன. இது விஞ்ஞானிகளால் 'முதியோர் இறப்பு மந்த நிலை கோட்பாடு" என்று அறியப்படுகிறது.

92 வயதிலிருந்து வருடாந்திர இறப்பு விகிதம் கிட்டத்தட்ட 0.25 ஆக இருப்பதை மனித வாழ்க்கை அட்டவணைகள் காட்டுவதைக் கவனித்ததால், காம்பெர்ட்ஸ் பிற்கால வாழ்க்கையில் இந்த இறப்பு விகிதத்தை முன்னறிவித்ததாகத் தெரிகிறது.

80 வயதிற்குப் பிறகு ஏன் இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படாது? அந்த வயதை அடையும் போது என்ன மாற்றங்கள் ஏற்படும்?

அந்த கேள்விகளுக்கு நிபுணர்களிடம் இன்னும் பதில் இல்லை.

ஜெல்லிமீன்களைப் போல, நம்மில் உள்ள ஏதோ ஒன்று குறைந்தபட்சம் இளமைக்குத் திரும்புகிறதா?

# ஜனாதிபதி தேர்தலை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம்?



யதீந்திரா

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது. வரவுசெலவுத்திட்டத்திற்கு பின்னர், இதற்கான அறிவிப்பு வெளியாகலாம். யார் பிரதான வேட்பாளர்கள் என்னும் தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை. எனினும் அவற்றை ஊகிப்பது கடினமான காரியமல்ல. ரணில் விக்கிரமசிங்கவே பிரதான வேட்பாளராக இருப்பார். அவரை எதிர்த்து எவர் நிறுத்தப்படுவார் என்பதை இப்போதைக்கு ஊகிப்பது கடினம். ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளை தோற்கடிக்க வேண்டுமென்னும் வியூகமொன்று, உள்ளுக்குள்ளும் வெளியிலும் வகுக்கப்படுமாக இருந்தால் மட்டும்தான், ஒரு பலமான பொது வேட்பாளரை நாம் காண முடியும். இல்லாவிட்டால் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னால் ஒரு பலவீனமான வேட்பாளரே இருப்பார்.

ஒரு வேளை, சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவாராயின், தேர்தல் களம் சற்று சூடுபிடிக்கும். ஏனெனில், ஜனாதிபதி தேர்தலில் எவர் வெல்ல வேண்டுமென்றாலும் கூட, அவருக்கு எண்ணிக்கையில் சிறுபாண்மை மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. ஏனெனில் தற்போதுள்ள சூழலில், தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றிபெறுவதை ஒருவரால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அவ்வாறான அரசியல் சூழலும் இல்லை, அதனை உருவாக்குவதற்கான அரசியல் காரணங்களும் இல்லை. ஈஸ்டர் தாக்குதல் கோட்டபாயவிற்கு அவ்வாறான சூழலை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

எண்ணிக்கையில் சிறுபாண்மை மக்களை பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னால் ஒரு பலமான பொது வேட்டபாளர் இல்லையென்றால், மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் தெரிவு ரணிலாக மட்டுமே இருக்கும். இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் மீண்டும் பிரதான இடத்தை பிடிக்கும்.

2005 தேர்தலில், ரணிலை தோற்கடிப்பதில் தமிழ் மக்களின் வாக்குகள் ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. 2015இல், மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதில், தமிழ் மக்களின் வாக்குகள் ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. தற்போது மீண்டும் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் தமிழ் மக்களை நாடிவருகின்றது. இதனை தமிழ் தேசிய தலைமைகள் என்போர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றனர்? முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும், தமிழ் மக்களின் வாக்குகள், ஒரு இலக்கிற்காக கையாளப்பட்டது, அந்த இலக்கு வெற்றியையும் பெற்றது - ஆனால், அதன் பயனை தமிழ் மக்களால் அடைய முடிந்ததா - என்றால் - பதில் இல்லை. இந்த நிலையில் மீளவும் தமிழ் மக்களின் வாக்குகள், ஜனாதிபதி தேர்தலில் முக்கிய பங்கை ஆற்றப் போகின்றது. ஆனால், இதனை தமிழ் மக்களுக்கு நன்மை சேர்பிக்கும் வகையில் எவ்வாறு கையாளுவது?

2005 தேர்தல் பகிஸ்கரிப்பு, ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் தோற்கடிக்கவில்லை - மாறாக, விடுதலைப் புலிகளையும் அரசியல் அரங்கிலிருந்து அழித்தது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான தேர்தல் பகிஸ்கரிப்பு, இந்திய மற்றும் மேற்குலக வியூகங்களுக்கு எதிரான ஒன்றாகவே நோக்கப்பட்டது.

இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளில் சிலவற்றிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடனான இணைப்புக்கான திட்டங்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தார். அதே வேளை, அமெரிக்காவோ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டுவருவதில் ஆர்வம் காட்டியது. இவ்வாறானதொரு நிலையிலேயே, விடுதலைப் புலிகளின் தலைமை, ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் பகிஸ்கரிப்பு மூலம், அதிகாரத்திலிருந்து அகற்றும் முடிவை எடுத்தது. விடுதலைப் புலிகளின் தலைமையை பொறுத்தவரையில், சமாதான முன்னெடுப்பு ஒரு அரசியல் பொறி, அதிலிருந்து தப்ப வேண்டுமாயின், ரணிலை அரங்கிலிருந்து, அகற்ற வேண்டும், அதன் மூலம், மீண்டும் யுத்தத்ததை ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்கலாம். ஏனெனில் சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்கம் இருந்திருந்தால், ரணிலுடன்தான், புலிகள் காலத்தை செலவிட்டிருக்க வேண்டும். அதனை முழுமூச்சுடன் கையாண்டிருக்க வேண்டும். ஆனால் மேற்குலகத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த, மகிந்த ராஜபக்சவை, தென்னிலங்கையின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கு ஒத்துழைத்தால், நோர்வே தலைமையிலான மேற்குலகின் சமாதான முன்னெடுப்புக்களை தொடர முடியாத சூழலை ஏற்படுத்தலாமென்றே புலிகள் கணக்குப் போட்டனர். அவர்களுக்கான தேவையில், அவர்களது கணக்கு சரி, ஏனெனில், அவர்கள் எதிர்பார்த்தது போன்றே, மகிந்த ராஜபக்ச நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை தொடர்வதை விரும்பவில்லையென்று அறிவித்தார். நாங்களே பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வோம் என்றார்.

எவ்வாறு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்த பிரேமதாச, இந்திய படைகளை வெளியேற்றுவதற்காக விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டாரோ, அவ்வாறானதொரு சூழல்தான், மகிந்த ராஜபக்ச விடயத்திலும் ஏற்படுத்தப்பட்டது. பிரேமதாச - புலிகள் உடன்பாட்டின் மூலம், இந்திய படைகளை வெளியேற்றும், அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறியது. புலிகள் தப்பித்துக் கொண்டனர். அதே போன்று, ரணிலை அகற்றும் அவர்களது இலக்கும் நிறைவேறியது. அவர்கள் எதிர்பார்த்தது போன்று, நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து வெளியேறுவதற்கான சூழல் உருவாகியது. ஆனால் இம்முறை சத்திரசிகிச்சை வெற்றி, ஆனால் நோயாளி மரணமுற்றார் - என்னும் நிலைமையே புலிகளுக்கு ஏற்பட்டது.



> **கடந்த காலத்தில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கோமாளித்தனமாக்கியது போன்று, இம்முறை நடந்துகொள்ளக் கூடாது. இன்றைய நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கு மிகவும் பொருத்தமானவர் இரா.சம்பந்தன் மட்டுமே. ஒரு வேளை, அவர் அதனை ஏற்க மறுத்தால், அவரது ஆசீர்வாதத்துடன் பிறிதொருவர் தொடர்பில் சிந்திக்கலாம்.**

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம், முழு வேகத்துடன் இராணுவரீதியில் புலிகளுக்கு எதிராக திரும்பிய போது, ஒட்டுமொத்த உலகும் புலிகளுக்கு எதிராகத் திரும்பியது. முன்னர் இந்தியா மட்டுமே இருந்தது. இந்தியா கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமையால், புலிகளால் தப்பித்துக் கொள்ள முடிந்தது ஆனால் இம்முறை ஒட்டுமொத்த மேற்குலகும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்தமையால், புலிகளால், யுத்தப் பொறியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை. சமாதான பொறியிலிருந்து தப்பித்துக் கொள்ளவதற்காக புலிகள் வகுத்த யுத்தப் பொறிக்குள், இறுதியில், புலிகளே அகப்பட்டுக் கொண்டனர்.

இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் தேர்தல் பகிஸ்கரிப்பு தந்திரோபாயம் இறுதியில், தமிழ் மக்களுக்கு மோசமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியது. 2015இல் மகிந்த ராஜபக்சவை தோற்கடிக்கும் தந்திரோபாய நகர்விலும், தமிழ் மக்களின் வாக்குகள் பிரதான பங்கை வகித்திருந்தது. இந்த இடத்தில், சிலர், ஒரு வாதத்தை முன்வைக்கலாம். அதாவது, மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளும்தானே அவ்வாறு பயன்படுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளுக்கு மட்டும் அப்படியென்ன விசேட தகுதியுண்டு?

கேள்வியில் தவறில்லை ஆனால் தர்க்கரீதியில் தமிழ் மக்களின் வாக்குகள் ஆற்றும் பங்கை, ஏனையவர்களது வாக்குகள் வழங்காது. ஏனெனில், ஏனையவர்கள் எந்தவொரு சந்தர்பத்திலும், தேர்தல் பகிஸ்கரிப்பு அல்லது, குறிப்பிட்ட நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, தேர்தலை பயன்படுத்தும் தீர்மானங்களை எடுக்கவே மாட்டார்கள். ஏனெனில் அவர்களிடம் அவ்வாறான அரசியல் நிலைப்பாடு இல்லை. மத்தியிலுள்ள அரசாங்கத்துடன் பேரம்பேசி, அமைச்சுப் பொறுப்புக்களை பெறுவதன் மூலம், அரசியலை முன்னெடுப்பதே அவர்களிடமுள்ள அரசியல் உபாயமாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், 2005இல் ரணிலை தோற்கடிப்பதில் ஈழத் தமிழ் வாக்குகளே பயன்பட்டது. அதே போன்று, 2015இல், மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதில் ஈழத் தமிழ் வாக்குகளே பிரதான பங்கை வகித்தது. அதே போன்று, 2024 தேர்தலிலும் ஈழத் தமிழ் வாக்குகளே பிரதான பங்கை வகிக்கப் போகின்றன. இந்த இடத்தை தமிழ் தலைமைகள் என்போர் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகின்றனர்? இதனை அடிப்படையாகக் கொண்டு, எவ்வாறு தமிழ் மக்களை ஒரு அரசியல் சமூகமாக நிறுவப் போகின்றனர்?

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் முக்கியமாக ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித்பிரேமதாச அல்லது பிறிதொருவர், எவராக இருப்பினும், அவர்கள் தமிழ் மக்களை நோக்கித் திரும்பும் சூழலை ஏற்படுத்த வேண்டும். வேறு வழியில்லாமல், தமிழ் மக்கள் தங்களுக்குத்தானே வாக்களிப்பார்களென்னும் எண்ணத்திற்கு இடமளிக்கக் கூடாது. ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு எண்ணுவதற்கான வாய்ப்புண்டு. ஏனெனில் இன்றைய நிலையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாற்றான ஒருவரை முன்னிலைப்படுத்தக் கூடிய நிலையில் தென்னிலங்கையில் எந்தவொரு கட்சியும் இல்லை. இல்லாவிட்டால் அனைவருமாக பொது வேட்பாளர் ஒருரையே நிறுத்த வேண்டும். இந்தச் சூழலை தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், தமிழ் மக்களின் வாக்குகளை ஒரு பலமான ராஜதந்திர ஆயுதமாக பயன்படுத்துவதற்கான தந்திரேபாயம் தொடர்பிலேயே, நாம் சிந்திக்க வேண்டும். ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி, வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிக்கும் தீர்மானத்தை எடுக்கலாம். இதன் மூலம் வேறு வழியின்றி, தமிழர் தரப்போடு பேரம் பேச வேண்டிய நிர்பந்தம் தென்னிலங்கைக்கு உருவாகும்.

ஆனால் கடந்த காலத்தில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கோமாளித்தனமாக்கியது போன்று, இம்முறை நடந்துகொள்ளக் கூடாது. இன்றைய நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கு மிகவும் பொருத்தமானவர் இரா.சம்பந்தன் மட்டுமே. ஒரு வேளை, அவர் அதனை ஏற்க மறுத்தால், அவரது ஆசீர்வாதத்துடன் பிறிதொருவர் தொடர்பில் சிந்திக்கலாம்.

சிலர் தேர்தல் பகிஸ்கரிப்பையும் ஒரு வழிமுறையாக முன்வைக்கலாம். ஆனால் அது உசிதமான அணுகுமுறையல்ல. பகிஸ்கரிப்பு ஒரு ஜனநாயக விரோத செயலாகவே நோக்கப்படும். தேர்தலில் போட்டியிடும் தீர்மானத்தை அறிவித்தாலே, தென்னிலங்கை பதட்டமடையும். முக்கியமாக ரணில் பதட்டமடைவார். இதனை தேர்தலுக்கு முன்பாகவே, ஒரு பேரம் பேசுவதற்கான உக்தியாக கையாளலாம். சில விடயங்களை செய்து காண்பிக்குமாறு கூறலாம் - அதே வேளை, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை, தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குமாறு நிபந்தனை விதிக்கலாம். காற்றுள்ளபோதே, தூற்றிக்கொள்ளும் உபாயங்கள் தொடர்பில் தமிழ் தேசிய தரப்புக்கள் சிந்திக்க முன்வர வேண்டும். சூழ்நிலை கருதி செயற்பட மறுத்தால், இறுதியில் எதுவுமே மிஞ்சாது. இதற்கு, விடுதலைப் புலிகள் தலைமையிலான ஆயுதப் போராட்டம், ஒரு சிறந்த உதாரணமாகும்.

# கணவன், குழந்தையை கைவிட்ட இளம் தாயாருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஒக. 18

கணவனையும் மூன்று வயதான குழந்தையையும் கைவிட்டுவிட்டு மற்றுமொரு இளைஞனுடன் குடும்பம் நடத்திய 21 வயதான இளம் தாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

22 வயதான இளைஞனுடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டு வந்த பெண்ணே, எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

குறித்த பெண் சிறு வயதாக இருக்கும்போதே இளைஞன் ஒருவரை காதலித்து திருமணம் முடித்து இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

அவர்களுக்கு குழந்தை ஒன்று பிறந்துள்ளது. இந்த நிலையில் கணவருக்கு தொழில்வாய்ப்பு இல்லாததை அடுத்து அவர் வேலைவாய்ப்பு பெற்று மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்றுள்ளார்.

அண்மையில் அவர் நாடு திரும்பினார். எனினும், அந்தப் பெண் அந்த பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவருடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அந்த இளைஞனுடன் தொடர்பு வேண்டாம் என கணவன் அறிவுறுத்தி வந்தபோதிலும், கணவனையும் குழந்தையையும் விட்டுவிட்டு இரு தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு குறித்த இளைஞனுடன் சென்றுவிட்டார்.

இந்நிலையில், அந்தப் பெண்ணுக்கு எதிராக பொலிஸ் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, அப் பெண்ணை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

விசாரணைக்கு வந்த பெண், 22 வயதான இளைஞருடன் செல்லப் போவதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடமையை செய்யவிடாது பொலிஸாருக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்களை தாக்கவும் முயன்றார். அத்துடன், பொலிஸ் நிலைய கட்டட, யன்னல் கண்ணாடிகளை சேதப்படுத்தியுள்ளார். இதனையடுத்து அப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவரது 3 வயது குழந்தையை விட்டுச் சென்றமை மற்றும் கடமையை செய்யவிடாது பொலிஸாருக்கு இடையூறு விளைவித்தமை போன்ற பல குற்றச் சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் அப்பெண்ணை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(அ)

# இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற ஏழு இலங்கையர்கள் சிக்கினர்!

கொழும்பு, ஒக. 18

சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற ஏழு இலங்கையர்கள் ஜோர்தானில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏழு இலங்கையர்களும் நேற்று முன் தினம் எல்லை தாண்டியவேளை கைது செய்யப்பட்டனர் என ஜோர்தான் இராணுவ இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

ஜோர்தான் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஏழு இலங்கையர்களும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் வேலைவாய்ப்பை பெறுவதற்காக ஜோர்தான் -இஸ்ரேல் எல்லையில் அண்மைய ஆண்டுகளில் ஆபிரிக்கா, ஆசியா மற்றும் துருக்கியைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக நுழைந்த பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த வருடம் இஸ்ரேலுக்குள் பிரவேசிக்க முயன்ற 52 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 23 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)



# நல்லிணக்க முயற்சிகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

கொழும்பு, ஒக. 18

அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன் தினம் வெளிநாட்டு இராஜதந்திரப் பிரிவினருக்கு விளக்கமளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் வெளிவிவகார அமைச்சில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர்.

இதன்போது நாட்டின் தற்போதைய வளர்ச்சிகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நல்லிணக்கத்தை கையாளும் உள்நாட்டு நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துரையாடலில் கலந்து கொண்டதுடன், அவர்கள் தமது பணிகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர்.

(அ)

# 77 ஆயிரம் சுற்றுலாவிகள் வருவர்

இம்மாதம் முதல் 15 நாட்களில் 77,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஒகஸ்ட் மாதத்தில் இதுவரை 77,552 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

ஒகஸ்ட் மாதத்தில் 15,133 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து வரும் பார்வையாளர்கள் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றது.

இதற்கிடையில், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 9,852, சீனாவில் இருந்து 5,491, ஜேர்மனியில் இருந்து 4,810, பிரான்சிலிருந்து 4,370, ரஷ்யாவில் இருந்து 3,672, இத்தாலியில் இருந்து 3,577, ஸ்பெயினிலிருந்து 2,809, அவுஸ்திரேலியாவில் இருந்து 2,713 மற்றும் இலங்கையில் இருந்து 2,638 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

ஜூலை மாதத்தில் மொத்தம் 143,039 சுற்றுலாப் பயணிகள் வந்ததாக குறிப்பிட்டுள்ளது.






# திருமலை சித்த மருத்துவ பீட அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

திருமலை, ஓக. 18

**கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக சித்தமருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக கடந்த 14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தரமுயர்த்தப் பட்டது.**

**இதனை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு திருமலை வளாக சித்தமருத்துவ பீடத்தில் இடம்பெறவுள்ளது.**




கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், சித்த மருத்துவ பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ. சுதர்சன் மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இவ்வலகினூடாக சித்த மருத்துவ கற்கைநெறி, பாரம்பரிய மருத்துவ நெறிகளை தற்போதைய நவீன சவால்களுக்கெற்ப ஆராய்ச்சியுடன் கூடியதாக கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்த சித்த மருத்துவ அலகு, இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கடந்த 2023.06.14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)



## கல்முனை,சாய்ந்தமருது,காரைதீவு பகுதிகளில் கரைவலைகளில் கீரி மீன் அள்ளும் மீனவர்கள்!

காரைதீவு, ஓக. 18

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா சூரை கிளவல்லா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல இலட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை பகுதிகளில் கீரி இன மீன்கள் நேற்று முன்தினம் கரைவலைகளில் அதிகளவு பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த கீரி மீன்கள் 1 கிலோ சுமார் 400 முதல் 500 வரை விற்பனையாகின்றது

தற்போது மருதமுனை, கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி, தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)



## மாணவர்களுக்கு உதவி

மட்டக்களப்பு, ஓக. 18

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சீருடை, பாதணி போன்றன அண்மையில் வழங்கப்பட்டன.

ஆரையம்பதியைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஏ.மகேந்திரன் தனது சொந்தச் செலவில் இதனை வழங்கினார்.

இவ்வுதவியை பெறுவதற்கு கொடையாளரை அணுகியவரும் ஆசிரியருமாகிய சு.விஜயகுமார் கொடையாளர் சார்பில் கலந்துகொண்டு இதனை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரி-56 துப்பாக்கியுடன் வேட்டைக்கு சென்ற பொலிஸ்காரர் சிக்கினார்!

திருமலை, ஓக. 18

கடமைக்காக வழங்கிய ரி-56 ரக துப்பாக்கியுடன் வேட்டைக்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டார்.

ஹொரவப்பொத்தான, வாஹல்கட பொலிஸ் பிரிவில் ரி-56 ரக துப்பாக்கியுடன் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரொட்டவெவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மற்றொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனது கடமைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியை பொலிஸ் எல்லையை தாண்டி அந்த பொலிஸ் உத்தியோகத்தர் எடுத்துச் சென்றுள்ளார்.

ஹொரவப்பொத்தான முதலாம் கட்டை பகுதியைச் சேர்ந்த யோதகே சுனில்சாந்த (வயது-58) என்பவரே கைதானார்.

கைது செய்யப்பட்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கெப்பித்திகொள்ளாவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வாஹல்கட பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அம்பாறையில் அதிகரித்து வரும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்!

அம்பாறை, ஓக. 18

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை ,நிந்தவூர், காரைதீவு ஆகிய பகுதிகளில் அண்மைக் காலமாக காட்டுயானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பகுதியை ஊடறுத்து செல்லும் பிரதான வீதியில் யானைகள் அடிக்கடி உலாவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 17 இற்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் வயல் நிலங்களை நோக்கி வருகை தருவதாகவும் இதனால் அப்பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், மக்கள் மிகுந்த அச்சத்துக்கு மத்தியில் அப்பகுதியில் வசித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யானைக்கூடத்தை கட்டுப்படுத்தி அவற்றை காட்டிற்குள் விரட்டுவதற்கும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உடனடியாக வருகை தருவதில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அண்மைக்காலங்களில் யானை - மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் யானை - மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர் சித்திர போட்டியில் வென்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

காரைதீவு, ஓக. 18

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் சம்மாந்துறை வலயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா கல்லூரியின் அதிபர் ஏ.ஏ.அமீர் தலைமையில் நேற்று நடைபெற்றது.



விழாவில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் சித்திரப்பாட இணைப்பாளர் எஸ். எல் அப்துல் முனாப் மற்றும் சித்திர பாட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. (அ)

# அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா விதித்த தடையால் சர்வதேச சந்தை ஆபத்தில்!

புதுடில்லி, ஓக. 18

**பாசுமதி அரிசி தவிர்ந்த ஏனைய அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்ததைத் தொடர்ந்து, உலகின் பல்வேறு நாடுகளின் அரிசி சந்தை ஆபத்தான நிலையினை அடைந்துள்ளதாக அல் ஜஸீரா தெரிவித்துள்ளது.**

அரிசி ஏற்றுமதியை தடை செய்வதற்கான இந்தியாவின் தீர்மானம் உள்நாட்டு காரணங்களை அடிப்படையாக கொண்டதாக இருந்த போதும், குறித்த தீர்மானமானது உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா வெளியேறியதைத் தொடர்ந்து மூன்று நாட்களின் பின்னர், கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி பாசுமதி அரிசி தவிர்ந்த ஏனைய அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்தது.

உடைந்த அரிசி ஏற்றுமதிக்கு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் தடை விதிக்கப்பட்ட நிலையில், இந்தியா இந்த நடவடிக்கையினை எடுத்திருந்தது.

உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, பணவீக்கம், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அச்சம் போன்ற காரணங்களால் இந்தியா இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஏற்றுமதி செய்யப்பட அரிசி அடங்கிய கப்பல்களை மாத்திரம் துறைமுகங்களை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும் இந்தியாவின் தடையினால் ஏற்பட்ட தாக்கத்தினை தற்போது உலக நாடுகள் உணரத்தொடங்கியுள்ளன.

உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதியாளரான இந்தியா 2022 ஆம் ஆண்டில் உலக அரிசி வர்த்தகத்தில் சுமார் 40 வீதத்தை கைப்பற்றியிருந்தது.

2022 ஆம் ஆண்டில் 140 நாடுகளுக்கு 9.66 பில்லியன் டொலர் மதிப்புள்ள 22 மில்லியன் தொன் அரிசியை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

இதன்படி, 4.5 மில்லியன் தொன் பாசுமதி அரிசி, 8 மில்லியன் தொன் புழுங்கல் அரிசி, 6 மில்லியன் தொன் வெள்ளை அரிசி மற்றும் 3.5 மில்லியன் தொன் உடைந்த அரிசி ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடைக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் அரிசியின் விலை 15 முதல் 25 வீதம் உயர்வடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய வெள்ளை அரிசியை நம்பியுள்ள பங்களாதேஷ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அல் ஜஸீரா தெரிவித்துள்ளது.

மேலும், உடைந்த அரிசியை உணவாக உட்கொள்ளும் பெனின், செனகல், டோகோ, மாலி போன்ற ஆபிரிக்க நாடுகளும் இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய போர் காரணமாக ஏற்கனவே தானியங்களின் விலை சர்வதேச சந்தையில் அதிகரித்துள்ள நிலையில், தற்போது அரிசியின் விலையும் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில், இந்தியாவைப் போன்று தாய்லாந்து, வியட்நாம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் ஏற்றுமதி தடையை விதிக்கக்கூடுமென்ற அச்சம் உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது. (அ)





# புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 63இற்கும் மேற்பட்டோர் பலி!

லாகோஸ், ஓக. 18

புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 63 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

குறித்த சம்பவம் மேற்கு ஆபிரிக்க தீவு நாடான கேப் வெர்டே அருகே இடம்பெற்றுள்ளது.

சிறுவர்கள் உட்பட 38 பேரை உயிருடன் மீட்டுள்ளதாகவும், இதில் 12 முதல் 16 வயதிற்கிடைப்பட்ட நான்கு பேர் உள்ளடங்குவதாகவும் சர்வதேச புலம்பெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் ஏழு பேரின் நிலைமை கவலைக்கிடமான நிலையில் உள்ளதுடன், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த படகு கடந்த ஜூலை மாதம் ஆரம்பத்தில் 100 இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோருடன் செனகலில் இருந்து புறப்பட்டிருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஆபிரிக்காவின் கடற்கரையிலிருந்து 385 மைல் தொலைவில் உள்ள கேப் வெர்டே என்ற இடத்தில் கடலோரக் காவல்படையினரால் குறித்த படகு நேற்று முன்திகம் செவ்வாய்க்கிழமையன்று கண்டுபிடிக்கப்பட்டதாக செனகல் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த படகு எப்போது விபத்துக்குள்ளானது என்பது தொடர்பில் இதுவரையில் சரியாக அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை, வறுமை மற்றும் போரில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர்.

புலம்பெயர்வோர் பெரும்பாலும் மிதமான படகுகள் அல்லது கடத்தல்காரர்களால் வழங்கப்படும் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளிலேயே பயணம் செய்கிறனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

இஸ்லாமாபாத், ஓக. 18
பாகிஸ்தானின் கிரிக்கெட் பாரம்பரியம் குறித்த காணொலியில் இம்ரான்கானை தவிர்த்தமைக்காக சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பை
இம்ரான்கானை உள்ள
டக்கிய புதிய காணொலியை
பின்னர் வெளியிட்டுள்ள
புதிய காணொலியில் இம்ரான்

# அகதிகள் படகு மூழ்கி 6 பேர் மரணம் பிரான்ஸில் 4 பேர் மீது குற்றச்சாட்டு!

பாரிஸ், ஓக. 18

வார இறுதியில் ஆங்கிலக் கால்வாயில் படகு மூழ்கி குறைந்தது ஆறு புலம்பெயர் அகதிகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பிரெஞ்சு வழக்கறிஞர்கள் நான்கு பேர் மீது குற்றச்சாட்டை புதன்கிழமை சுமத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை சுமார் 65 பேரை ஏற்றிச் சென்ற கப்பல் கவிழ்ந்ததில் ஆறு ஆப்கானியர்கள் இறந்ததை அடுத்து இரண்டு ஈராக்கியர்கள் மற்றும் இரண்டு சூடானியர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஈராக்கியர்கள் மனித கடத்தல் வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவதால், அவர்கள் சட்டவிரோத குடியேற்றத்திற்கான குற்றவியல் சதி குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்கின்றனர்.

கப்பலில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் ஆப்கானியர்கள், சில சூடானியர்கள் மற்றும் சில சிறுவர்கள் என்று பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பல் கவிழ்ந்ததற்கு இயந்திரக் கோளாறு காரணமாக இருப்பதாக புலனாய்வாளர்கள் தீர்மானித்ததாக பாரிஸ் வழக்கறிஞர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமையன்று கப்பல் கவிழ்ந்ததைக் கண்டதும், அவசரகால சேவைகள் உடனடியாக அப்பகுதிக்கு அனுப்பப்பட்டன என்று பிரெஞ்சு வழக்கறிஞர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹெலிகொப்டர் மற்றும் கடல்சார் கண்காணிப்பு விமானமும் அனுப்பப்பட்டது.

நவம்பர் 2021 இல் 27 புலம்பெயர்ந்தோர் இறந்த விபத்து தொடர்பாக, உதவிக்காக சுமார் 15 அழைப்புகளுக்குப் பதிலளிக்கத் தவறியதாக பிரெஞ்சு அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக ஏழு வீரர்கள் குற்றம் சாட்டப்பட்டனர்.

நவம்பர் 2021 விபத்தை தொடர்ந்து அகதிகளை கையாள்வதில் பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

இந்த முயற்சிக்கு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மில்லியன் யூரோக்களை பாரிஸ் அனுப்ப லண்டன் ஒப்புக்கொண்டதை அடுத்து, பிரெஞ்சு அதிகாரிகள் ரோந்து மற்றும் பிற தடுப்புகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

ஆயினும்கூட, கால்வாயைக் கடப்பதற்கான ஆபத்தான முயற்சிகள் தொடர்கின்றன. (அ)

# அடுத்துவரும் நாட்களில் அதிகரிக்கிறது வெப்பம்

## பிரான்ஸுக்கு மேலே அனல் அமுக்கம்


பாரிஸ், ஓக. 18

பாரிஸ் பிராந்தியம் உட்பட நாட்டின் வட பாதிப் பிரதேசங்களில் கடந்த சில நாட்களாகக் காணப்பட்ட குளிருடன் கூடிய இதமான கோடைக் கால நிலை முடிவுக்கு வருகிறது. நாடெங்கும் அடுத்த சில தினங்களில் வெப்பம் அதிக உச்ச அளவுகளை எட்டும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தென் அரைப் பாகம் ஏற்கனவே கடும் வெப்பத்தைச் சந்தித்துள்ளது. அங்கு அது மேலும் உயர்வடைந்து அடுத்த வாரமளவில் 40 பாகை வரை பதிவாகலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் தெற்குப் பகுதியிலிருந்து மேலெழுந்து வரவுள்ள அனல் காற்று, நாட்டுக்கு மேலாக ஒரு வெப்ப அமுக்க வலயத்தை-வெப்பக் வெப்பக் குவிமாடத்தை உருவாக்கவுள்ளது என்றும் -அதன் விளைவாக ஏற்படவுள்ள உஷ்ணத்தைப் பெரும்பாலான பகுதிகளில் வசிப்போர் அனுபவிக்க நேரிடலாம் என்றும் - பிரான்ஸின் காலநிலை அவதான நிலையமாகிய மீற்றோ பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

“வெப்பக் குவிமாடம்” என்பது வளிமண்டலத்தின் அனைத்து மட்டங்களிலும் வெப்பக் காற்றை நிலைநிறுத்தி வைத்திருக்கின்ற, உயர் அழுத்தங்களாலான மூடிய மண்டலம் ஆகும். அது ஏற்படுத்துகின்ற உச்ச அளவான வெப்ப நிலையை நாடு முழுவதும் அடுத்த வாரம் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் அனுபவிக்க நேரிடலாம் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். (அ)



# ஓய்வை அறிவித்தார் வஹாப் ரியாஸ்



பாகிஸ்தானின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் வஹாப் ரியாஸ் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று கடந்த புதன்கிழமை அறிவித்தார்.

"சர்வதேச ஆடுகளத்தை விட்டு வெளியேறி, நம்ப முடியாத பயணத்திற்குப் பிறகு, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளேன்" என்று பஞ்சாப் இடைக்கால அரசாங்கத்தின் விளையாட்டு ஆலோசகராகவும் இருக்கும் வஹாப் - சமூக ஊடக தளமான எக்ஸ் (முன்னர் ருவிற்றர்)இல் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி. சி. பி.), அவரது குடும்பத்தினர், பயிற்றுநர்கள், வழிகாட்டிகள், அணி வீரர்கள், ரசிகர்கள் மற்றும் "எனக்கு ஆதரவளித்த அனை வருக்கும்" நன்றி தெரிவித்தார்.

வஹாப் பாகிஸ்தானுக்காக 27 டெஸ்ட், 91 ஒருநாள் போட்டிகள் மற்றும் 36 இருபது -20 போட்டிகளில் விளையாடினார். கடைசியாக 2020 இல் சர்வதேச கிரிக்கெட்டில் ஆடினார்.

அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 34.50 சராசரியில் 83 விக்கெட்களையும் ஒருநாள் போட்டிகளில் 34.30 என்ற சராசரியில் 120 விக்கெட்களையும் இருபது - 20 போட்டிகளில் 28.55 சராசரியில் 34 விக்கெட்களையும் எடுத்தார். அவர் சமீபத்தில் பாகிஸ்தான் சுப்பர் லீக் 2023 இல் பெஷாவர் சல்மி அணியில் அங்கம் வகித்தார்.

"கடந்த இரண்டு வருடங்களாக எனது ஓய்வைப் பற்றிப் பேசி வருகிறேன். 2023இல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது எனது இலக்கு. எனது நாட்டிற்கும் தேசிய அணிக்கும் என்னால் முடிந்தவரை சிறந்த முறையில் சேவையாற்றினேன்" என தெரிவித்தார்.

சர்வதேச அரங்கில் பாகிஸ்தானை பிரதிநிதித்து வப்படுத்துவது "கௌரவம் மற்றும் பாக்கியம்" என்று அவர் கூறினார்.

வஹாப் லாகூரில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றினார். அங்கு எதிர்காலத்தில் பயிற்றுநராக வருவதற்கான வாய்ப்பு குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

இந்த முடிவு இறுதியில் பிசிபியிடம் இருக்கும் என்றும் ஆனால்,இளைய வீரர்களுக்கு பயிற்சியளிப்பதை தான் விரும்புவதாகவும் கூறினார். பாகிஸ்தானிலோ அல்லது வெளிநாட்டிலோ ஒரு வாய்ப்பு கிடைத்தால், அவர் தனது வாழ்க்கையில் நிறைய கற்றுக்கொண்டதால், இளம் வீரர்களுக்கு "மாற்றம்" செய்ய விரும்புவதாக அவர் கூறினார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கான தனது முடிவு "உணர்ச்சி ரீதியானது" அல்ல, ஆனால் "உண்மையில்" வேரூன்றியது என்றும் அவர் வலியுறுத்தினார்.

"நான் உண்மையில் நம்புகிறேன். பாகிஸ்தான் அணியில் இருக்கும் பந்து வீச்சாளர்கள் மிகச்சிறந்தவர்கள். நான் அணியில் விளையாடுவது அநியாயம் என்று நினைக்கிறேன். எனவே இது உணர்ச்சிவசப்பட்ட முடிவு அல்ல,"-என்றார். (அ)

# சி.எஸ்.கேயில் இருந்து வெளியேறும் ஸ்ரோக்ஸ்?

சென்னை, ஒக. 18

2024ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) அணியில் இருந்து பென் ஸ்ரோக்ஸ் விலக வாய்ப்புள்ளது என்ற ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட பென் ஸ்ரோக்ஸ் மோசமான ஆட்டம் காரணமாக அணி
யிலிருந்து வெளியே அமர வைக்கப்பட்டார். இருந்தாலும் தரமான வீரரான அவர் நிச்சயம் அடுத்த ஆண்டு சி.எஸ்.கே அணியில் முக்கிய பங்கு வகிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து அண்மையில் ஓய்வை அறிவித்த பென் ஸ்ரோக்ஸ் மீண்டும் 50 ஓவர் உலக கிண்ணத் தொடரில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், ஓய்விலிருந்து மீண்டும் வரும் பென் ஸ்ரோக்ஸ் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடினால் அடுத்த 2024ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடரின்போது ஓய்வு எடுத்துக் கொண்டு அந்த நேரத்தில் தனது காலில் சத்திர சிகிச்சை செய்யவும் வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார். (அ)



# இம்ரான்கானை மீண்டும் இணைத்த கட்டுப்பாட்டு சபை




இஸ்லாமாபாத், ஒக. 18

பாகிஸ்தானின் கிரிக்கெட் பாரம்பரியம் குறித்த காணொலியில் இம்ரான்கானை தவிர்த்தமைக்காக சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட பாகிஸ் தான் கிரிக்கெட் சபை தற்போது இம்ரான்கானை உள்ள டக்கிய புதிய காணொலியை வெளியிட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள புதிய காணொலியில் இம்ரான் கானின் முக்கிய சாதனைகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இணைத்துள்ளது.

போதியநேரமின்மை காரணமாக முக்கியமான விடயங்களை தவறவிட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. எதிர்வரும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பில் வெளியிட்ட காணொலியில் 1992இல் உலகக் கிண்ணத்தை வென்ற அணியின் தலைவரான இம்ரான் கானை சேர்த்துக்கொள்ளாதமை தொடர்பிலேயே சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எதிர்கொண்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆட்சியில் உள்ளவர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலை பின்பற்றுகின்றது என ரசிகர்கள் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தனர்.

பாகிஸ்தானின் வேகப்பந்து ஜாம்பவான் வசிம் அக்ரம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உடனடியாக அந்த காணொலியை நீக்கவேண்டும் - மன்னிப்பு கோரவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். நீண்டநேர விமானப் பயணத்தின் பின்னர் இலங்கையை சென்றவடைதற்கு முன்னர் பாகிஸ்தானின் கிரிக்கெட் வரலாறு குறித்து காணொலியில் இம்ரான்கான் இடம்பெறாததை பார்த்தவேளை எனக்கு வாழ்நாளில் ஏற்படாத அதிர்ச்சி ஏற்பட்டது என அக்ரம் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

# ஆடுகளங்களின் தன்மைக்கு ஏற்ப வீரர்கள் நுட்பமாக ஆடவேண்டும்

## முஷ்தாக் அஹ்மத் அறிவுரை



கொழும்பு, ஒக. 18

கிரிக்கெட் போட்டிகளுக்கு வழங்கப்படும் ஆடுகளங்கள் எல்லோருக்கும் (விளையாடும் இரண்டு அணிகளுக்கும்) பொதுவானவை. ஆடுகளங்களின் தன்மைக்கு உகந்தவகையில் வீரர்கள் தங்களை சரிசெய்துகொண்டு நுட்பத்திறனுடன் திட மனதுடனும் விளையாடுவது அவசியமாகும் என பாகிஸ்தானின் முன்னாள் சுழல்பந்துவீச்சு ஜாம்பவான் முஷ்தாக் அஹ்மத் தெரிவித்தார்.

ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், எல். பி. எல். போட்டிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆர். பிரேமதாஸ அரங்க ஆடுகளங்கள் பற்றி தொடுக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பாக முஷ்தாக் அஹ்மதிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "எந்தவொரு லீக் கிரிக்கெட் போட்டிக்கும் இது நல்லதாகப்படவில்லை. ஆனால், எல்லோருக்கும் ஆடுகளங்கள் பொதுவானவை என்பதால் நல்லது என்று தான் கூறவேண்டும். அத்தகைய ஆடுகளங்கள் சில சமயங்களில் சவால் விடுக்கத்தான் செய்யும். ஒரு வீரராக, ஒரே அணியாக, எனது சக பயிற்றுநர்கள் இதனை அறிவார்கள் என நான் நம்புகிறேன்.

ஆடுகளங்கள் உகந்தவையல்ல என்பதை உணர்ந்தால் போட்டிக்கு ஏற்றவாறு வீரர்கள் தங்களது நுட்பத்திறனை, மனோநிலையை உறுதியுடன் வெளிபடுத்த வேண்டும். நிலைமை சீராகும்போது, சாதகமாகும்போது ஆற்றலின் மட்டமும் உயரும்.

"எனவே அத்தகைய ஆடுகளங்கள் சுற்றுப்போட்டிக்கு, குறிப்பாக உள்ளூர் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு நல்லது என்றே நான் கருதுகிறேன். அவர்கள் ஆடுகளம் மற்றும் மைதானத்தின் தன்மைகளையும் எதிரணியின் தன்மையையும் நன்கு புரிந்துகொண்டால் எல்லோருக்கும் வெற்றியை அடைவதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என நான் கருதுகிறேன் - என்றார். (அ)

# மார்லன் மீதான குற்றச்சாட்டு நிரூபணம்

சார்ஜா, ஒக. 18

மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் மார்லன் சாமுவேல்ஸ் எமிரேட்ஸ் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நான்கு குற்றங்களில் குற்றவாளி என ஒரு சுயாதீன ஊழல் எதிர்ப்பு தீர்ப்பாயத்தின் விசாரணையைத் தொடர்ந்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 2021 இல் ஐ.சி.சியால் குற்றஞ்சாட்டப்பட்ட சாமுவேல்ஸ் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு தனது உரிமையைப் பயன்படுத்திய பின்னர் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார்.



# கடன் சவால்களை கையாள இலங்கைக்கு சீனா ஆதரவு

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

பீஜிங், ஒக. 18

**இலங்கையின் நிதிக் கடன் சவால்களை திறம்பட கையாள்வதில் இலங்கைக்கு ஆதர வளிப்பதாக சீனா மீண்டும் தெரிவித்துள்ளது.**

சீனாவின் யுனான் மாகாணத்தின் நடைபெற்று வரும் 07ஆவது சீன-தெற்காசிய கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்தபோதே சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வங் யி இதனை தெரிவித்துள்ளார்.

இறைமை, சுதந்திரம் மற்றும் தேசிய பெருமையை பாதுகாப்பதற்கு சீனா பலமாக ஆதரவளிப்பதாகவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



மேலும் இலங்கைக்கு நிரந்தர ஆதரவு மற்றும் கடினமான காலங்களில் பயனுள்ள ஆதரவு அளித்தமைக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன தனது நன்றியை தெரிவித்தார். (அ)

# கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை பிற்பகலில்

யாழ்ப்பாணம், ஒக. 18

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும்,நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி சுரன்சனின் மாணவியுமான செல்வி நியோமி வெலிஜியா வில்சனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை

19 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையைப் பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற எட்டாவது மாணவியாவார்.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட்பணி செ.அன்புராசா அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி குருஷேத்திரம் நடனாலயத்தின் இயக்குநர் செல்வி பேரின்பநாயகி சிவகுரு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# பாலர் பாடசாலை முதல் பாலியல் கல்வித் திட்டம்!

கொழும்பு, ஒக. 18

பாலர் பாடசாலை முதல் பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாலியல் கல்வி வழங்கும் திட்டத்தை அடுத்த மாதம் முதல் தொடங்குவதற்கு பாராளுமன்றம் முடிவு செய்துள்ளது.

இதற்கமைய பாடத்திட்டத்தை தயாரிப்பதற்கான முன்னேற்றம் குறித்து அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என்றும், அந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் திட்டத்தை தொடங்குவதற்கான குறிப்பிட்ட திகதி தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நீல மாணிக்கக்கல் ஒன்று அதிகூடிய விலைக்கு ஏலம்

கொழும்பு, ஒக. 18

நீல மாணிக்கக்கல் ஒன்று இலங்கை வரலாற்றில் அதிகூடிய விலைக்கு ஏலம் போயுள்ளது.

கஹவத்தை-கட்டாங்கே பகுதியில் உள்ள மாணிக்கக்கல் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட நீல மாணிக்கக்கல்லே 43 கோடி ரூபாய்க்கு அதிகூடிய விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் மேற்பார்வையில் கஹவத்த பிரதேசத்தில் இந்த விலைமதிப்பற்ற நீலக்கல் நேற்று முன் தினம் புதன்கிழமை ஏலம் விடப்பட்டுள்ளது.

குறித்த நீல மாணிக்கக்கல் 99 கரட் என தெரிவிக்கப்பட்டது.



கடந்த வாரம் கஹவத்தை நகரை அண்மித்த கட்டாங்கே பிரதேசத்தில் உள்ள சுரங்கம் ஒன்றில் கற்கள் தோண்டிய போது இந்த பெறுமதியான நீல மாணிக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

பாலமடுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவரினால் 43 கோடி ரூபாய்க்கு இந்த மாணிக்கக்கல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹிந்தி, சீன மொழிகளையும் மாணவர்கள் கற்கவேண்டும்

## ஜனாதிபதி ரணில் ஆலோசனை

கொழும்பு, ஒக. 18

மாறிவரும் உலகிற்கு ஏற்ப எதிர்காலத்தில் இலங்கையில் பிள்ளைகள் இந்தி மற்றும் சீன மொழிகளைக் கற்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் புதன்கிழமை நுகேகொடையில் உள்ள அனுல வித்தியாலயத்தில் பரிசளிப்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் கல்வியானது எதிர்காலத்திற்கு ஏற்றவாறு பாரியளவில் மாற்றமடைய வேண்டும். நாம் புதிய பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும். மாறிவரும் உலகிற்கு ஏற்றவாறு நமது பிள்ளைகள் ஆங்கிலத்துடன் கூடுதலாக சீன மற்றும் இந்தியையும் கற்கவேண்டும்.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய ஜெனரேஷன் ஆல்பாவிற்கு பொருந்தும் வகையில் புதிய பாடங்களை நாம் அறிமுகப்படுத்தவேண்டும். பாடசாலைகளில் மாணவர்கள் செல்போன்கள் மற்றும் போட்காஸ்ட்கள் மூலம் தங்கள் கல்வியைத் தொடரவேண்டும்.

மேலும், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மரபணு தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கியல் (ரோபோடிக்ஸ்) ஆகியவற்றை கற்பிக்க வேண்டும்.

புதிய தொழில்நுட்பம் எதிர்காலத்தில் ஒன்றரை டிரில்லியன் டொலர்களை உலகளாவிய வருவாயைக் கொண்டுவரும். அதில் ஒரு அங்கமாக இருப்பதைத் தவிர இலங்கைக்கு வேறு வழியில்லை-என்றார். (அ)

# மூச்சுத்திணறல், வயிற்றுப்போக்கு குழந்தைகள் இடையே அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 18

வறட்சியான காலநிலை மற்றும் தூசி காரணமாக சிறுவர்களுக்கு மூச்சுத்திணறல் மற்றும் வயிற்றுப்போக்கு தற்போது அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மூச்சுத்திணறல் உள்ள குழந்தைகளுக்கு பகல், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் இருமல் ஏற்படுவதோடு மூச்சு விடுவதில் சிரமமும் ஏற்படும் என்றும் வைத்தியர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலைமைகளுக்கு வைத்தியசாலையில் சிகிச்சைகள் கிடைக்கப்பெறுவதால், பிள்ளைகளுக்கு இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் எவ்வித அச்சமும் இன்றி வைத்தியசாலைக்கு அழைத்து வருமாறு பெற்றோர்களிடம் வைத்தியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்படுவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கவேண்டும். அத்தகைய குழந்தைகள் வீட்டில் இருந்தால் புகைபிடிப்பதைத் தவிர்க்க வேண்டும் .

முக்கியமாக அசுத்தமான உணவு மற்றும் நீர் மற்றும் வறட்சியான காலநிலையால் ஈக்கள் அதிகரிப்பதன் காரணமாக குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு அதிகரித்து வருகிறது.

வயிற்றுப்போக்கு உள்ள குழந்தைகளுக்கு காய்ச்சல், வாந்தி, தளர்வான இயக்கம் மற்றும் வயிற்று வலி போன்ற அறிகுறிகளை உருவாக்கலாம் என்றும், நீரிழப்பைத் தவிர்க்க அவர்களுக்கு இயற்கையான திரவங்களை வழங்கவேண்டும்.

குழந்தைகளுக்கு தோடம்பழம், ஜீவானி திரவம், வாழைப்பழம் மற்றும் யோக்கட் கூட கொடுக்கப்படலாம். ஆனால் வெண்ணெய், எண்ணெய் உணவுகள், பப்பாளி மற்றும் இலை காய்கறிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்-என்றார். (அ)

# கடும் வறட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 29 வீதத்தினால் குறைந்தது

கொழும்பு, ஒக. 18

நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக 73 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 29 வீதம் வரை குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரண கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் வறட்சியினால் நாட்டின் பல மாவட்டங்களில் குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# எம்.பிக்களுக்கான மாதிவெல குடியிருப்பிலிருந்து 1 1/2 கிலோ மீற்றருக்குள் 42 மசாஜ் நிலையங்கள்!

## சுட்டிக்காட்டுகிறார் விமலவீர திஸாநாயக்க

கொழும்பு, ஒக. 18

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல குடியிருப்பிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றருக்குள் 42 மசாஜ் நிலையங்கள் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"இங்கு ஆயுர்வேதம் என்ற



பெயரில் மசாஜ் நிலையங்கள் நடத்தப்படுகின்றன. ஒருவரிடம் 5,000 ரூபாய் வசூலிக்கும் இடங்களும் உண்டு" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தெஹியத்தகண்டிய சாலிகா நகர மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார். (அ)

## சிவனுக்கு...

களுடன் ஈழம் சிவசேனை அமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் பேச்சில் ஈடுபட்டன. இதன் பின்னர், நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மறவன்புலவு சச்சிதானந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை விகாரதிபதியை நான் சந்தித்தபோது அவர், முன்வந்து அங்கு சிவன் ஆலயம் ஒன்றை அமைக்குமாறு என்னிடம் கூறினார். இதற்கமைய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கு வந்திருந்த அந்த விகாராதிபதி அவ்வாறு சிவன் ஆலயத்தை அமைக்க வேண்டுமென்பதை பகிரங்கமாகவே உறுதி செய்திருந்தார்.

குறிப்பாக இந்து, பௌத்த மதப் பிரதிநிதிகள் என நாங்கள் பலரும் இருக்கத்தக்கதாகவே சிவன் ஆலயம் ஒன்றைக் எனக் கூறினார். அதனால் இந்த விடயம் குறித்துத்தான் நாங்கள் இங்கு கலந்துரையாடியிருந்தோம். அதைத் தவிர வேறு எந்தவிதமான தீர்மானங் களையும் இங்கு நாங்கள் எடுக்கவில்லை. ஆனால், அதை எங்கு கட்டுவது, எப்போது கட்டுவது என்பது குறித்து பேசவில்லை. ஏனெனில், சிவன் கோவில் கட்டுவது ஒரே நாளில் கட்டி முடிக்கிற விடயமல்ல. அதற்கு இடம் கண்டுபிடிப் பதுடன் இன்னும் பல செயல்பாடுகள் முன்னெடுக்க வேண்டியதாக உள்ளது.

இங்கு பௌத்தர்களை அழைத்து அவர்களாகவே சிவன் ஆலயம் அமைப் பது குறித்து சொல்லியிருக்கிறார்கள். அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் பின்னர் பார்த்துக் கொள்வோம் - என்றார்.

இதேவேளை, குருந்தூர்மலையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ள பொங்கல் தொடர்பில் ஊடகவிய லாளரின் கேள்விக்கு பதிலளித்த அவர்,

நாளைய (இன்றைய) பொங்கலில் பங்கேற்பதற்கு மன ஒப்புதல் வேண்டும். மாறாக அரசியலுக்காக பொங்கல் செய்ய முடியாது. அருள் பெருக்குமிடமாக கோயில் காணப்படும் நிலையில் சிலர் இருள் பெருக்குவதற்காகவும் வேறு சிலர் பொருள் பெருக்குவதற்காகவும் செல்கின் றார்கள். இதேவேளை பௌத்த கோயி லுக்கு இருள் பெருக்குவதற்காகச் செல்கின்றார்கள் என்றால் இந் நாடு இருளில் மூழ்கியிருக்க வேண்டும் என்பதே பொருள் எனத் தெரிவித்தார். (ஐ)

## ஹெரோயினுடன்...

உள்ள மது விற்பனை நிலைய பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடியுள் ளார்.

இதனை அவதானித்த புலனாய்வு பொலிஸார் அவரை சோதனை செய்த போது அவரது உடைமையில் இருந்து 100 மில்லி கிராம் போதைப்பொருளு டன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், மன்னார் மூர் வீதியில் வசித்து வரும் 28 வயதான பொலிஸ் கான்ஸ்ட பிள் என்று தெரிய வந்துள்ளது. இவர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் பணியாற் றுபவர் என்றும் தெரிய வருகின்றது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில், குறித்த நபரை விசாரணை களின் பின் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## பொங்கலுக்கு...

விடுக்கப்பட்டுள்ளது.

அந்த சுவரொட்டிகளில், 'தமிழர்க ளின் இந்த பொங்கல் வழிபாட்டை தடுக்க சிங்கள - பௌத்தர்கள் குருந்தூர் மலை நோக்கி வாருங்கள் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மணலாறு (வெலிஓயா) பிரதேசத்தி லேயே இந்த சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன. அத்துடன், "குருந்தி விகாரை" முகநூல் பக்கத்திலும் இந்த சுவரொட்டிகள் பகிரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதுகாப்பற்ற...

விளையாட்டு மைதானத்தில் நடை பெற்று வந்தது.

மைதானத்தில் மெய்வன்மை போட்டிநடைபெற்றபோது மைதானத் தின் அருகில் காணப்பட்ட நீர்குழியில் மாணவர்கள் இருவர் தவறுதலாக விழுந் துள்ளனர்.

மாணவர்கள் விழுந்ததை அவதானித் தவர்கள் கடமையில் இருந்த ஆசிரியருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, பூவரசங் குளம் பொலிஸார், விசேட அதிரடி படையினர் அங்கு விரைந்து, பல்கலைக் கழக மாணவர்கள், ஊர் மக்கள் ஆகியோ ருடன் இணைந்து குறிந்த மாணவர்களை மீட்டனர்.

மாணவர்கள் இருவரும் உடனடியாக வவுனியா பொது மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டனர் என்று தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தை அறிந்து பல்கலைக் கழகத்திற்கு சென்ற வவுனியா பல்கலைக் கழக துணைவேந்தர் ரி. மங்களேஸ்வரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, அங்கு பல்கலைக்கழக மாணவர்கள் குவிந்தனர். இதனால், அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து துணைவேந்தர் பாதுகாப் பாக அங்கிருந்து வெளியேற்றினர்.

இதையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் விசாரணை களை நடத்தி வருகின்றனர். (ஐ)

## குருந்தூர்மலை...

ஏற்படுத்தக்கூடும் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

குருந்தூர்மலையின் அமைவிடத்தின் அடிப்படையில் கலவரம் ஏற்படுமாயின், அதனை தடுப்பதற்கு மிகவும் கடினம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஒருவரின் மத வழிபா டுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மத வழிபாடுகளை தடுக்க தடை கட்டளை வழங்க முடியாது என்று நீதிவான் தீர்ப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, குருந்தூர்மலை தொல்பொருள் பாதுகாப்பு காப்பகமாக காணப்படுவதனால் பொங்கல் வழிபாட்டை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பான நிபந்தனைகளை தொல்பொருள் திணைக்களம் விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒரு மாதத்...

மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக சபையின் தலைவர் புத்திக்க இத்தமல் கொட தெரிவித்துள்ளார்.

நெல் கிடைக்காதமையால் மூடப் பட்டுள்ள அம்பாந்தோட்டை நெல் களஞ்சியசாலை, விவசாய அமைப்புக ளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் திறப்பது தொடர்பில் ஆராயப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரை யாடுவதற்காக அமைச்சர் மகிந்த அமரவீர அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக்க இத்தமல் கொட தெரிவித்துள்ளார். (ஐ)

## வறட்சியால்...

காலநிலையினால் ஏற்பட்ட குடிதண் ணீர் பிரச்னையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 50 இலட்சம் சுற்றுலாவிகளை இலங்கை அழைத்துவர ஏற்பாடு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஒக.18

வருடாந்தம் 50 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட் டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடி யதும், சிறந்த சுற்றுலா வசதிகளை கொண்ட இடமாகவும் இலங்கையை மாற்றுவதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கும் திட்டங்கள் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு குறித்து அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந் ததோடு, நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் புதிய நிலவரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அதிகாரிகள் விளக்கம ளித்தனர்.

இலங்கையை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக கட்டமைப்பதற்கான பரிந்துரை களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுக்கமைய சுற்றுலா அமைச் சும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களும் 2025 ஆம் ஆண்டு வரையான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்து வருகின்றன. அந்த பணிகள் 95 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள் ளதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

தனியார் துறையினரின் பங்களிப் புடன் உயர்தர ஹோட்டல் பாடசாலை யொன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்த மான கட்டிடம் ஒன்றை தேடுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் வகையில், தற்போது பயன்படுத் தப்படாத பாரம்பரிய தோற்றம் கொண்ட கட்டிடங்கள் மற்றும் பங்களாக்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்குமாறும், தற்போது வரையில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பகுதிகளை கண்டறியுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

புதிய முதலீடுகளுக்கு உகந்த சூழலை நாட்டிற்குள் உருவாக்குவதற்கான முதலீட்டு உட்கட்டமைப்பு கூட்டுத் தாபனம் ஒன்று நிறுவப்பட்டு, கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள் வதற்கான சபை யொன்றை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் முதலீட்டு வலயங்கள், சுற்றுலா வலயங்கள், தொழில்நுட்ப வலயங்கள் என்பவற்றை அதன் கீழ் நிறுவத் திட்டமிட்டுள்ள தாகவும் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, 09 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், சுற்றுலாச் சபைகளை ஸ்தாபிக்கவும் ஒவ்வொரு சபைகளின் கீழ் பிராந்திய குழுக்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இங்கு உரையாற்றிய சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ,

எதிர்வரும் நாட்களில் நடைபெற வுள்ள ஆசியக் கிண்ணப் போட்டிக ளுக்காக பெருமளவான சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட் டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், மத்திய, ஊவா மாகாணங் களில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பல இடங்கள் இருப்பதாகவும், குறிப்பாக மத்திய மாகாணத்தில் வளி மாசடைவு குறைந்த ளவில் காணப்படுவதால், நிலையான சுற்றுலாத் தளமாக அதனை அபிவிருத்தி செய்வதற்கான இயலுமை காணப்படு வதாகவும், இந்நாட்டின் விமான நிலையம் மற்றும் பூங்காக்களில் நெருக் கடி ஏற்படாத வகையில் சுற்றுலாத்துறை வசதிகளை மேம்படுத்த திட்டமிட்டி ருப்பதாகவும் கூறினார். (ஐ)

# 35 - 45 வயது வரையான பெண்கள் கிளினிக்குகளுக்கு அவசியம் செல்க

கொழும்பு, ஒக. 18

35 முதல் 45 வயதுக்கு உட்பட்ட அனைத்துப் பெண்களும் கர்ப்பப்பை மற்றும் மார்பகப் புற்றுநோயை கண்டறிவதற்காக தங்கள் சுகாதாரப் பகுதியில் உள்ள கிளினிக்குகளுக்குச் செல்லுமாறு சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

பெண்களை தாக்கும் புற்றுநோய் தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் பத்மக டி சில்வா தெரிவிக்கையில்,

பெண்களிடையே மிகவும் பொதுவான புற்றுநோய்களாக கருதப்படுபவை கர்ப்பப்பை மற்றும் மார்பக புற்றுநோய்களாகும். எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு 35 முதல் 45 வயது வரையான பெண்கள் தமது பிரதேச கிளினிக்குகளுக்குச் சென்று சோதனை செய்துகொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஐ)

## அகழ்வுக்கான...

ஜனாதிபதி பணிமனை அறிவித்தி ருந்ததாக கடந்த வழக்கின்போது காணாமல் போனோர் பணிமனை மன்றில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், நிதி கிடைக்காத மையால் உடனடியாக அகழ்வு பணியை மேற்கொள்ளமுடியாது என்றும் நேற்றைய வழக்கில் சுட்டிக்காட்டப் பட்டது. இதைத் தொடர்ந்து இந்த வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் வழக்கு தவணையின் போது வழக்கில் முன்னிலையாக உத்தரவிட்ட அனைத்து அதிகாரி களும் நீதிமன்றில் பிரசன்னமாக வேண்டும் என்று உத்தரவிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ఈళనాడు

# கோதுமை மா 198 ரூபா

கொழும்பு, ஒக. 18

கோதுமை மா கிலோ ஒன்றின் விற்பனை விலையினை 198 ரூபா என நுகர்வோருக்கு அறிவிக்குமாறு அரசாங்க நிதி தொடர்பான குழு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அரசாங்க நிதி தொடர்பான குழு பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தலைமையில் கூடியபோதே இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் கணக்கீட்டின்படி கோதுமை மா கிலோ ஒன்றின் விலை 198 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் கோதுமை மாவுடன் தொடர்புடைய இரண்டு பிரதான நிறுவனங்கள் கூடுதல் இலாபத்தினை அடைய முடியாதவாறு, நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் அரசாங்க நிதி தொடர்பான குழுவினால் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கோதுமை மாவை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் அதிக கையிருப்புகளை பேணி கூடுதல் இலாபம் பெறுவதனை தடுக்கும் வகையில் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இலங்கையின் கோதுமை மா இறக்குமதியில் 80 வீத சந்தை அதிகாரத்தைக் கொண்ட இரண்டு பிரதான நிறுவனங்களுக்கும் கோதுமையை தானியமாக இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால் கூடுதல் இலாபத்தை ஈட்ட முடிந்ததா என்பது தொடர்பில் கண்டறிய வேண்டுமென அரசாங்க நிதி தொடர்பான குழு வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வலியுறுத்தப்பட்ட நோக்கம் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதுள்ள கையிருப்புகளின் சரியான தரவுகளை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பதனை கண்டறிய முடியுமென அரசாங்க நிதி தொடர்பான குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிமெந்து உற்பத்திக்கான மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள மேலதிக வரியினை இரண்டு ரூபாவினால் அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)



## சாவகச்சேரியில் வீட்டின் முன் மோட்டார் சைக்கிள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஒக. 18

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானை பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் இனம் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சங்கத்தானை, தாமோதரம்பிள்ளை வீதியில் உள்ள வீட்டுக்குள், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் புகுந்த மர்ம நபர்கள் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்ததாக வீட்டிலுள்ளவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவர் வெளிநாட்டில் தொழில் புரியும் நிலையில், தாயும், மூன்று மகள்களும் வசித்து வந்த வீட்டிலேயே மர்ம நபர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

# திடீரென நுழைய முயற்சித்த குழுவால் ஜனாதிபதி செயலகம் அருகில் பதற்றம்

கொழும்பு, ஒக. 18

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் உட்பட தொழிற்சங்க பிரதிநிதிகள் குழுவொன்று முன்னறிவிப்பின்றி ஜனாதிபதி செயலகத்திற்குள் பிரவேசிக்க முற்பட்டதால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திற்குள் குறித்த குழுவினர் உட்புக முயற்சித்த வேளையில், பாதுகாப்புக் கடமையில் இருந்து பொலிஸாரும் இராணுவத்தினரும் குழுவினரை தடுத்து நிறுத்தியதாகவும் அதன் பின்னர் மேலதிக செயலாளர் ஒருவர் வந்து இவர்களுடன் கலந்துரையாடியதாகவும் தெரியவருகிறது.

சந்திப்பதற்கு வேறு ஒரு திகதியை தருவதாக மேலதிக செயலாளர் கூறிய போதும், நேற்றே ஜனாதிபதி அல்லது அவரது செயலாளரை சந்திக்க வேண்டுமென குறித்த குழுவினர் கூறியுள்ளனர்.

என்றாலும், மேலதிக செயலாளர், இவர்களது கோரிக்கையை நிராகரித்துள்ளதுடன், வேறு ஒரு திகதியில் சந்திப்பை ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த பின்னர் குறித்த குழுவினர் கலைந்து சென்றுள்ளனர். (அ)

# போலி முத்திரைகள் பதித்த 8000 மதுபானப் போத்தல்கள்

## கைப்பற்றியது மதுவரித் திணைக்களம்

கொழும்பு, ஒக. 18

நாட்டின் பல பகுதிகளில் உள்ள 25 மதுபானக் கடைகளில் நடத்தப்பட்ட சோதனைகளின்போது போலி முத்திரைகள் பதித்த 8000 மதுபானப் போத்தல்களை மதுவரித் திணைக்களம் கண்டுபிடித்துள்ளதாக இலங்கை மதுபான உரிமம் வழங்கும் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நுவரெலியா - நானுஓய, ரிக்கில்லகஸ்கட, இரத்தினபுரி, தங்கல்ல மற்றும் அம்பலாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த போலி முத்திரைகள் தயாரிப்பின் பின்னணியில் மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் அஜித் உடுகம தெரிவித்தார்.

மதுபானப் போத்தல்களில் ஒட்டப்படும் வழக்கமான முத்திரைகளில் 10 இலக்கங்களிலான குறியீட்டு எண் காணப்படும் நிலையில் அதனை ஒத்த நிலையில் குறித்த போலி முத்திரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த போலி முத்திரை மதுபானம் தயாரிக்கப்படும் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு, அங்கு போலி முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, மதுவரித் திணைக்களமும் மற்றும் தொடர்புபட்ட மதுபான உற்பத்தி நிறுவனமும் இணைந்து இதனை மேற்கொண்டுள்ளதாக அஜித் உடுகம தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டிய வரியை தவிர்க்கும் வகையில் போலி முத்திரை ஒட்டப்படுவதுடன், அதன் இலாபமானது மதுபான உற்பத்தி நிறுவனத்துக்கு வழங்கப்படுவது தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கிளிநொச்சியில் பாம்பு தீண்டி ஒன்றரை வயது குழந்தை பலி!

கிளிநொச்சி, ஒக. 18

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் ஒரு வயதும் 7 மாதங்களுமான குழந்தை பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளது.

தருமபுரம், பிரமந்தனாறு பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இரவு குழந்தையை பாம்பு தீண்டியது.

தனுஜன் ஜெஸ்மின் என்ற குழந்தையே பாதிக்கப்பட்டது.

வீட்டுக்குள் நித்திரையிலிருந்த சமயத்தில் பாம்பு தீண்டியது. இதனை அவதானித்த குடும்பத்தினர் உடனடியாக தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக குழந்தை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடித்த பாம்பையும் கொண்டு வருமாறு கூறியதை யடுத்து, உறவினர்கள் பாம்பையும் கொண்டு சென்றுள்ளனர்.

குழந்தை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பொரளை சிறுவர் வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கையெடுக்கப்பட்டபோதும், நேற்று முன்தினம் குழந்தை உயிரிழந்தது. (அ)

## அமெரிக்க விசேட பிரதிநிதி 20 ஆம் திகதி இலங்கைக்கு!

கொழும்பு, ஒக. 18

அமெரிக்காவின் இணையவெளி மற்றும் டிஜிற்றல் கொள்கைக்கான தூதுவர் நத்தானியேல் சி பிக் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை அவர் சந்திக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

சைபர் பாதுகாப்பு, இணையவெளி சுதந்திரம், தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பன தொடர்பில் நத்தானியேல் சி பிக் கொழும்பில் இரு தரப்பு கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

பெங்களூரில் இடம்பெறும் ஜி-20 டிஜிற்றல் பொருளாதார அமைச்சர்களின் கூட்டத்தின் அமெரிக்க தலைமை பிரதிநிதியாக கலந்துகொள்வதற்காக நேற்று இந்தியாவிற்கு பயணமானார். (அ)

## தர்மபுரம் குளத்தில் ஆணின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஒக. 18

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாதன் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள சிறிய குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன் பிடிக்கச் சென்ற 46 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே தொழிலில் ஈடுபட்டிருந்தபொழுது உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட வலிப்பு நோய் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இன்று முதல் பாடசாலை விடுமுறை

கொழும்பு, ஒக. 18

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கும் இன்று முதல் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான முதற் கட்ட பணிகள் நேற்றுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரண்டாம் தவணைக்கான இரண்டாம் கட்ட பாடசாலை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.